
# தூண்டில்

Tamilische Zeitschrift





உள்ளே....

- அன்று கூட்டணி, இன்று புலிகள், நாளை...?
- ஸோலிங்கன் சொல்லும் கதை
- கொலைகார முட்டைகள்
- மொழி புரோக்கர்கள்
- நாட்டிலிருந்து ஓர் கடிதம்
- கூட்டிச் செல்லுங்கள்
- இன்னும் பல...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி புறோக்கர்கள்

"தம்பி தெரியுமோ அது என்ன சொல்லுதெண்டு?"

"அண்ணே எனக்கு பிரெஞ்ச் தெரியாது. நான் இங்க வந்து மூன்று மாதந்தான் ஆகுது"

"அப்பிடியே. (ஒரு ஏளனப் பார்வை) இண்டைக்கு டாக்டர்கள் குறைவாம். இப்ப பத்து மணியாகிட்டுதுதானே. காலைச் சாப்பாடு சாப்பிட விருப்பினவை வெளியில சென்று வரலாம் என்றும் அப்பிடி விரும்பினவை பேரைத் தந்துட்டு போகட்டாம் என்றும் சொல்லுது. நீ சாப்பிட்டுட்டியே?"

"ஓமண்ணே. நீங்க..?"

"இனித்தான் சாப்பிட வேண்டும். பரவாயில்லை"

"அண்ணை வந்து வெகு காலமே?"

"ஐந்து வருசமாச்சு. இண்டைக்குக் கூட லீவு போட்டிட்டு இவர கூட்டி வரவேண்டி வந்துட்டுது. இவரும் புதுசு என்ன செய்யிற. இதுவும் ஒரு கடமைதானே. நம்ம பொடியன்கள் நமக்காக அங்க சாகுறான்கள். இவரும் அதில இருந்தவர்தான். காயப்பட்டு பிரச்சினையால் இங்கு வரவேண்டி வந்திட்டுது. இப்படி நம்ம ஆட்களுக்கு உதவி செய்யிறதும் ஒரு தொண்டுதானே. நான் வந்த நாளிலிருந்து இப்படித்தான் உதவி செய்யிறது. பாவம் நம்மட ஆட்கள். பிரான்சுக்காறன் படுமோசம். கதைக்கத் தெரியாட்டிப் போச்சு. அதுவும் இந்த கொமட்டுல பிரெஞ்ச் தெரியாட்டி நாம சொல்ற வியாதி இதுகளுக்கு புரியவே புரியாது. நீ தனியா வந்தனியே?"

"இல்ல அண்ணே. எனக்கு தெரிந்த பையனோடு வந்தனான்"

"அவனுக்குப் பேசத் தெரியுமே?"

"ஓமண்ணன். அவன் இங்க யூனிவசிற்றியில் படிக்கிறான்"

"எங்க ஆள்?"

சற்றுத் தள்ளிப் புத்தகம் படித்துக் கொண்டிருந்த செல்வத்தைக் காட்டுகிறேன்.

"தம்பி உனக்கு ஏதும் உதவி தேவைப்பட்டா சொல்லு. வேலை கிடைச்சிட்டுதே?"

"இல்லயண்ணே"

"இதுதான் என்ட டெலிபோன் நம்பர். வேலை தேவை எண்டாலும் செய்து கொடுக்கிறனான்"

எனக்குள் ஓர் அற்ப ஆசை. அண்ணேயைப் புடிச்சால் எல்லாம் சரியாகி விடும்.

பிரான்சு மொழியில் முன்னர் பேசிய அந்தப் பெண்மணி ஒவ்வொருவரிடமும் ஏதோ கேட்டுக் கொண்டு பெயர் வாங்குகின்றா. அண்ணையிடமும் என்னிடமும் கேட்கின்றா. இந்த அண்ணன் ஏதோ சொல்ல அப் பெண்மணி எங்களை விட்டு மற்றவரிடம் சென்றுவிடுகின்றா.

(தொடர்ச்சி 31ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# ஸோலிங்கன் சொல்லும் கதை

ஊர்வலம் கோஷங்களுடன் நகரத் தொடங்கியது. சுமார் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பாஸில எதிர்ப்புடன் ஒன்று கூடியிருந்தனர். துருக்கிய இடதுசாரிக் குழுக்கள், ஜேர்மனிய இடதுசாரிக் குழுக்கள், ஒட்டொனொமன்கள், பாடசாலை மாணவர்கள், தேவாலயப் பிரிவுகளைச் சேர்ந்தோர் ... எனப் பல தரப்பட்டோருடன் ஊர்வலம் பிரதானசாலையில் நகர மத்தியை நோக்கி நகர்ந்தது.

"கொலைஞர்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள்"

"நாஸிகளை விரட்டியடி"

"சர்வதேச ஒற்றுமை ஓங்குக"

"ஜேர்மனியப் பணமும், ஆயுதமும் உலகெங்கும் கொலை செய்கின்றன"

கோஷங்கள் ஓங்கி ஒலிக்கின்றன. துண்டுப் பிரசுரங்கள் சுறுசுறுப்பாக விநியோகிக்கப்பட்டன. நாஸிகளை முறியடி என்ற ஸ்ரிக்கர்கள் கடைகளிலும், லைற் போஸ்ற்றுகளிலும் ஒட்டப்பட்டன.

29.05.93 சனிக்கிழமை இரவு ஸோலிங்கன் (Solingen) நகரில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு தாய், நாலு வயது சின்னப் பிள்ளை, 18,19 வயதான இரண்டு பிள்ளைகள், இவர்களிடம் விருந்தாளியாக துருக்கியில் இருந்து வந்திருந்த 12 வயதான பெண் ஆக மொத்தம் 5 பெண்கள் நாஸிகளால் வீட்டுடன் எரித்துக் கொல்லப்பட்டார்கள். இக் கொலைகளைக் கண்டித்தும், நாஸிகளை எதிர்த்தும், ஜேர்மனியில் தலைவிரித்தாடும் இனவெறியை அம்பலப்படுத்துவதாகவும் நடந்த ஊர்வலத்தில் தமிழர்கள் சார்பாக இல்லையென்றாலும் நாங்கள் 5 பேர் பங்கெடுத்துக் கொண்டோம்!

இந்த அநியாயப் படுகொலைகள் நடந்த தினத்திலிருந்து ஸோலிங்கன் நகரிலும், ஜேர்மனியின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களினதும், பிற எதிர்ப்பு நடவடிக்கைகளினதும் ஒரு தொடர்ச்சியாகவே ஜேர்மனியின் எல்லாப் பாகங்களிலுமிருந்தும் வந்து கலந்து கொண்டவர்களுடன் 05.06.93இல் நடந்த இந்த ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

5 துருக்கியப் பெண்களினதும் கொலைகளை அடுத்து நீண்டகாலமாகத் தூங்கிக் கிடந்த பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் திடீரென விழித்துக் கொண்டன. பக்கம் பக்கமாகப் படங்களுடன் செய்திகள், விசேட தொலைக் காட்சி நிகழ்ச்சிகள்... இவற்றின் உச்சக்கட்டமாக கிறிக்கெற் கொமன்றி செய்வதுபோல் தீ வைக்கப் பட்ட வீட்டிற்கு முன் நின்று ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை நேர்முக வர்ணனை செய்தார்கள் கிட்டத்தட்ட 5 நாட்களுக்கு.

நடந்த கொலைகள் நியோநாஸிகளால் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை மறைத்து. இக் கொலைகளைத் தனி ஒரு வர் வெறியில் செய்தாரா அல்லது தனிப்பட்ட காரண ங்களுக்காக நடந்த கொலைகளா எனத் திசை திருப்பும் வேலையில் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளையில் அவர்கள் வாயில் அவல் கிள்ளிப் போடுவதாக சில சம்பவங்கள் திடீரென்ற நடந்தன.

திட்டமிட்ட இனவெறி பயங்கரவாதத்தை எதிர்த் து அரசியல் ரீதியாகப் போராட வேண்டிய சூழல் உருவாகியிருந்த போது - ஏராளமான ஜேர்மனியர்க ளிடம் அநுதாப அலை உரு வாகியிருந்தபோது - கொலை நடந்த இரண்டா ம் நாள் எரிந்த வீட்டின் முன் வந்திறங்கியது சாம் பல் ஓநாய்கள் என அழை க்கப்படும் துருக்கிய வலது சாரி ஆயுதக் கும்பலான Grauen Wölfe. "பல்லுக் குப் பல்லு, இரத்தத்திற்கு இரத்தம், துருக்கியர்கள் கொல்லப்பட்டால் நாம் ஜேர்மனியர்களைக் கொல் வோம். துருக்கி வாழ்க" என இவர்கள் பகிரங்க பிரகடனம் செய்தவுடன் அனைத்துத் தொலைக்காட் சிக் கமராக்களும் இவர்க ளைச் சூழ்ந்து கொண்டன. அடுத்து சாம்பல் ஓநாய் கள் துருக்கிய இடதுசாரிக் குழுக்களைப் பொல்லுகளா ல் தாக்கினார்கள். துருக் கிய அரசால் ஒடுக்கப்பட்ட போதிலும் ஜேர்மனியில் வாழும் ஒடுக்கப்படும் வெளிநாட்டவர் என்ற ரீதி யில் எதிர்ப்பு நடவடிக்கை களில் கலந்துகொண்ட குர் திஷ் குழுக்களையும் அடித் து நொருக்கினார்கள். பின்னர் லோலிங்கன் நக ரமத்தியில் உள்ள கடைகள், றெஸ்ரோறண்டுகளின் கண் ணாடிகள் உடைந்து நொரு ங்கின. கார்கள் தாக்கப் பட்டன. இவற்றின்போது பொலிஸ் எந்த நடவடிக் கையும் எடுக்காமல் பார்த் துக் கொண்டிருந்தது. இவ ற்றை ஒரு கிறிமினல் படத் திற்குரிய இலாவகத்துடன் தொலைக்காட்சிகள் படம் பிடித்து "ஜேர்மனியில் வெளிநாட்டுப் பயங்கரவா திகளின் அடாவடித்தனம்" என்று ஒளிபரப்பின.

வழக்கமாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கெடு த்து வந்த பல "அரசியலற் ற" பொதுமக்களது பங்க ளிப்பு சாம்பல் ஓநாய்களின் சேவையால் பெருமளவில் குறைந்திருந்தது. அத்து டன் குர்திஷ் மக்களும் தங்களுக்கு எதிரான வன் முறையினாலும், துருக்கிய கொடிகளுடன் ஊர்வலங் கள் நடத்தப்பட்டதாலும் இந்த எதிர்ப்பு நடவடிக் கைகளைப் பகிஷ்கரித்தனர்

##

இப்போது ஊர்வலம் பொலிஸ் நிலையம் ஒன்றி ன் முன் நின்றது. ஊர்வல த்தின் இருமருங்கிலும் ஜேர்மனியின் அனைத்துப் பாகங்களிலும் இருந்தும் வந்திருந்த அதிரடிப் பொலிசாரும், விசேட கொமாண்டோக்களும் கைளில் பொல்லுகள், துப் பாக்கிகளுடன் தயார் நிலையில் ஊர்வலத்துடன் தொடர்ந்து வந்து கொண் டிருந்தனர்.

"பொலிஸ் நாஸிகளின் நண்பன்"

"இப்போது ஆயுதங்க ளுடன் தொகையாக வந்து நிற்கும் நீங்கள் வெளிநாட் டவர்களை நாஸிகள் கொல்லும்போது எங்கு போனீர்கள்?"

"டொச் பொலிஸ் பாஸிஸ்டுகள்"

கோஷங்கள் ஆக்ரோ ஷமாகக் கிளம்பின. பொலிசார் குண்டாந்தடி களை கைகளில் ஏந்தியப டி கல்லாக நின்றார்கள்.

ஊர்வலம் தொடர்ந்து நகர்ந்து டொச்ச வங்கி யைக் கடந்தபோது கற்கள் பறந்தன. வங்கியின் ஜன் னல் கண்ணாடிகள் உடைந் து நொருங்கின.

"ஜேர்மனியப் பணம் உலகெங்கும் கொலை செய்கிறது"

நகரப் பகுதியே ஊர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லம் கிளப்பிய கோஷங்களைத் தவிர அமைதியாக இருக்கிறது. கடைகள் உடைக்கப்படலாம் என்ற அச்சத்தில் பல கடைகள் மூடப்பட்டே இருக்கின்றன. பாதையெங்கும் பொலிஸ்காரரும், ஊர்வலக்காரரும் தான்.

"வெளிநாட்டவருக்கு எதிராக எத்தனை தாக்குதல்கள் நடந்துவிட்டன. எத்தனை பேரை நாஸிகள் கொலை செய்துவிட்டார்கள். வெளிநாட்டவருக்கு எதிராக எத்தனை கொடுமையான சட்டங்கள் போடப்பட்டன. அப்போதெல்லாம் கண்ணை மூடிக் கொண்டிருந்த ரீ.வி.க்காரர்கள் இப்போது வந்து பேட்டி தரட்டாம்" என்று கோபப்பட்டார் ஒரு துருக்கி நண்பர். ஊர்வலத்தின் மேல் பொலிஸ் ஹெலிகொப்ரர் ஒன்று வட்டமிட்டுக் கொண்டேயிருந்தது.

ஐந்து பேரின் கொலை இடம்பெற்ற மறுதினம் அரசியல்வாதிகள், அமைச்சர்கள் என்று பலர் தமது அரசியல் நாடகத்தில் ஒரு பகுதியாக மலர்ச்செண்டுகளுடன் எரிந்த வீட்டிற்கு வந்தபோது அங்கு குழுமியிருந்த பாஸிஸ எதிர்ப்புக் குழுக்களால் "கொலைகாரர்கள் வருகிறார்கள்" என்ற கோஷத்துடன் வரவேற்கப்பட்டார்கள்.

"அனைத்துப் பாஸிஸக் குழுக்களையும் தடை செய்" என்று மனித உரிமைக் குழுக்கள் அரசிடம் கோரிக்கை விடுத்தன. இதுபற்றிக் கணக்கிலெடுக்காத அரசு "இந்தச் சம்பவம் நாஸிகளால் திட்டமிடப்பட்டு நடாத்தப்படவில்லை. ஒருவர் அல்லது சிலரால் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதலே" என்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இதனையடுத்து எரிந்த வீட்டிற்கு அருகாமையில் வசித்துவந்த 16 வயதான ஒரு டொச் இளைஞனை பொலிஸார் "சந்தேகத்தின் பேரில்" கைது செய்தனர். அவனின் வாக்குமூலத்தை வைத்து மேலும் 4 பேர் தேடப்படுவதாக அவர்களின் படங்களுடன் பொலிஸின் அறிவிப்பு வெளியானது. ஆனால் இரண்டு நாட்களில் கதையே மாறியது. தாம் கைது செய்தவனுக்கு மனநோய் என்றும், அதனால் தாம் சந்தேகத்தின் பேரில் நால்வரைத் தேடுவதாக விடுத்த அறிவித்தலையும் வாபஸ் பெறுவதாகவும் பொலிஸ் அறிவித்தது. இன்று வரை ஐவரின் படுகொலை சம்பந்தமாக எந்த ஒரு நியோநாஸியும் கைதாகவில்லை. எந்த ஒரு நியோநாஸிக் குழுவும் குற்றம் சாட்டப்படவில்லை.

"டொச் பொலிஸால் நாஸிகள் கைது செய்யப்படுவதில்லை. சிலநேரங்களில் தவிர்க்க முடியாமல் கூட்டிச் செல்லப்படுகிறார்கள். எனினும் மிக விரைவில் வெளியில் வந்துவிடுகிறார்கள். காரணம் ஒன்றில் அவர்களுக்கு வயது பதினாறுக்குள் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்றால் எந்த வித தீய நோக்கமுமின்றி குடிபோதையில்தான் ஏதாவது செய்திருப்பார்கள். அப்படியும் இல்லையென்றால் மனநோயாளியாக இருப்பார்கள். ஆனால் ஒரு இடதுசாரி தும்மினால் கூட சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணையே இல்லாமல் வருடக்கணக்காக சிறையிலடைத்து விடுவார்கள்" என்று பல்லைக் கடித்தபடி கூறினார் அருகில் வந்த ஒரு ஒட்டோனொமன்.

ஊர்வலம் சுமார் ஒன்று ஒன்றரை மணித்தியாலங்களின் பின் முடிவிடத்திற்கு வந்தது. ஒரு பக்கத்தில் தொலைக்காட்சியினர் லொறிகளில் வந்திருந்தனர். இன்னொரு பக்கத்தில் மேடை போடப்பட்டிருந்தது. ஊர்வலத்தினர் முடிவிடமான திறந்த வெளிக்குள் வந்து குழுமியதும் பொலிஸார் அவ்விடத்திற்கு வெளியே முற்றுமுழுதாகச் சுற்றி வளைத்து நின்று கொண்டனர்.

அந்த இடத்திற்கு சற்று அப்பால் சாம்பல் ஒநாய்கள் துருக்கியக் கொடிகளுடன் குழுமியிருந்தனர். அவர்களை ஒரு அடி கூட நகர விடாமல் பொலிஸார் சுற்றி வளைத்து தடுத்திருந்தனர்.

இப்போது மேடையில் ஏறி துருக்கிய, ஜேர்மனியக் குழுக்களைச் சேர்ந்தோர் பேச ஆரம்பித்தார்கள். ஜேர்மனிய அரசை அம்பலப்படுத்தியும், நாஸிகளை முறியடிக்க வேண்டியது பற்றியும், ஜேர்மனிய, வெளிநாட்டுக் குழுக்கள் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது பற்றியும் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கையில்...

அந்த இடத்தைச் சுற்றி வளைத்திருந்த பொலிஸ் கும்பலிலிருந்து சிறு தொகையினர் உள்ளே ஓடி வந்து ஒரு ஒட்டொனொமனை இழுத்துக் கொண்டு போய் கூட்டத்தின் மத்தியில் வைத்து தரையில் கிடத்தி கால்களாலும், தடிகளாலும் தாக்கினார்கள். இதைத் தாங்கிக்கொள்ள முடியாத கூட்டத்தினர் பொலிஸாரைச் சூழ வந்து தங்கள் தோழனை விடுவிக்க முயற்சி செய்தனர். உடனே பொலிஸார் அவர்களைத் தங்கள் குறுந்தடிகளால் அடித்து நொருக்க ஆரம்பித்தார்கள். கூட்டம் சிதறி ஓடியது.

"பலநாடுகளைச் சேர்ந்த தொலைக்காட்சியினர், பத்திரிகைகள் இந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கொண்டிருக் கின்றனர். அவர்கள் முன்னிலையில் எங்களைப் பயங்கரவாதிகள் என்று காட்டவே பொலிஸார் ஆத்திரம் தரும் வகையில் நடந்து கொள்கிறார்கள். தயவு செய்து குழம்பாதீர்கள். கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தி முடிப்போம்" என மேடையில் நின்றவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். கூட்டத்தினர் மறுபடி ஒழுங்குக்கு வந்தனர்.

ஆனால் சில நிமிடங்களிலேயே மீண்டும் பெருமளவு பொலிஸார் உள்ளே வந்து குண்டாந்தடிகளால் எல்லோரையும் கண்மூடித்தனமாகத் தாக்க ஆரம்பித்தார்கள். இப்போது கூட்டத்தில் ஒரு பகுதியினர் பொலிஸார் மீது கற்களையும், போத்தல்களையும் வீசினர். சுலோக அட்டைகளைத் தாங்கிக்கொண்டு வந்த தடிகளை முறித்து பொலிஸைத் தாக்க ஆரம்பித்தனர்.

"வேண்டுமென்று கூட்டத்தைக் குழப்ப வேண்டாம் எனப் பொலிஸைக் கேட்டுக் கொள்கின்றோம். கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடிப்பதற்காக பொலிஸார் உடனடியாக இந்த இடத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும்" என மேடையில் நின்றவர்கள் மறுபடியும் வேண்டுகோள் விடுத்தனர்.

பொலிஸ் கேட்பதாக இல்லை. ஏற்கெனவே இப்படியொரு தாக்குதலை செய்ய வேண்டும் எனத் திட்டமிட்டு நடப்பதை அவர்களது நடவடிக்கை தெளிவாகவே காட்டிவிட்டது. பொலிஸார் குண்டாந்தடிகளால் தாக்க கூட்டத்தினர் சிதறி ஓடுவதாகவும், பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர் அவர்கள் போத்தல்கள், கற்களுடன் திரும்பி வந்து தாக்க பொலிஸார் பின்வாங்குவதாகவும், மறுபடி இன்னும் கூடுதலான பொலிஸார் சேர்ந்து அவர்களைத் துரத்துவதாகவும் நேரம் போய்க் கொண்டிருந்தது.

"நிலமை கட்டுப்பாட்டுக்குள் இல்லை. அதனால் இத்துடன் இன்றைய இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பங்குபற்றியவர்களுக்கு நன்றி கூறி முடித்து வைக்கின்றோம்" என் மேடையிலிருந்து அறிவிக்கப்பட்டது.

நாங்கள் அங்கிருந்து புறப்பட்டு வீட்டுக்கு வந்து ரீ.வி.யைப் போட்டால் செய்திகளில் புதுக்கதை சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"இன்று ஸோலிங்கனில் நடந்த ஊர்வலத்தின் போது அதில் பங்குபற்றிய இடதுசாரிப் பயங்கரவாதிகள் வேண்டுமென்றே குழப்பம் விளைவித்தனர். கடைகளின் கண்ணாடிகளை உடைத்தார்கள் ஊர்வலம் முடிவடைந்த இடத்தில் மாறுபாடான கருத்துடைய குழுக்களைச் சேர்ந்த இரண்டு துருக்கியர் மோதிய போது அவர்களைத் தடுத்து நிறுத்தப் பொலிஸார் விரைந்தனர். அப்போது இடதுசாரி, வெளிநாட்டு வன்முறையாளர்கள் பொலிஸார் மீது கற்கள், போத்தல்களை வீசித் தாக்கினார்கள். இதன்போது பல பொலிஸார் காயமடைந்தனர்..." என்ற செய்தியுடன் சிலநாட்களுக்கு முன் சாம்பல் ஒநாய்கள் துருக்கிய இடதுசாரிகளைத் தாக்கிய படத்தைப் போட்டு அது இன்று நடந்ததாகக் காட்டி, பின்னர் கூட்டத்தினர் பொலிஸார் மீது கற்களையும், போத்தல்களையும் எறிவதை மட்டும் காட்டினார்கள். தொடர்ந்த செய்தியில்...

"... இது பற்றிக் கருத்துத் தெரிவித்த அரசாங்கப் பேச்சாளர் இவற்றைப் பார்த்துக்கொண்டு தாங்கள் பொறுமையாக இருக்க முடியாதென்றும், வன்முறையில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள் அவர்களுடைய நாட்டுக்குத் திருப்பியனுப்பப் படுவார்கள் என்றும், மற்றவர்கள் மேல் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். அத்துடன் இந்த நாட்டில் மீண்டும் இடதுசாரிப் பயங்கரவாதம் வளர்ந்து வருவதை சுட்டிக்காட்டி எச்சரித்ததுடன், இதனை எந்தவகையிலும் அனுமதிக்க முடியாதென்றும் கூறினார்..."

ஸோலிங்கனில் கொலைசெய்யப்பட்ட ஐந்து பெண்களைப் பற்றி இப்போது ஒன்றும் சொல்லக் காணோம்!

ஸோலிங்கன் கொலைகளின் பின் இரண்டு வாரங்களுக்குள் நாடு முழுவதிலும் பரவலாக நியோ நாஸிகளால் வெளிநாட்டவர்களுடைய 70 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இது தொடர்பாக யாரும் கைதாகாததுடன், இச் சம்பவங்களுக்கு நாஸிகள் பொறுப்பில்லை என அரசு அறிவித்து வருகிறது!!

- ஏ.பி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த இதழில்....
ஈழம்: கோவணாண்டிகள்
சுவிஸ்: அற்றாக்!
இலங்கை: சரிநிகரும், சூரியதீபனும்

# ஒற்றுமைப் பூமி

"நிதானமிழந்தவர்கள்
வாழவேண்டாம்.
எம் பூமிக்கு மேல்
வாழவேண்டாம்"
செய்தி -
நாம் மட்டுமே
வாழ வேண்டும்.
நாம் மட்டுமே
ஆள வேண்டும்.

மனிதாபிமானம்
பொதுவுடமை
இவை எல்லாவற்றையும்
அகராதி இனி
சுமப்பது
சட்ட விரோதம்.

மசூதிகளின்
"குப்பா"க்களை
உடைத்துப்போட்டு
மயானம் அமைத்த
எங்கள்
சமய வழிகாட்டிகளுக்கு
வழிவிடுங்கள்.
அல்லது
அவர்கள்
"தாருபாச்சுக்கள்"
அவிழ்ந்துவிடும்.

உயிர்களைப் பற்றிக்
கவலைப்படுவதற்கு
அவர்களுக்கு
நேரமில்லாதபடி
"ராமர்" பக்தி.

அக்கிரமக்காரருக்கு
"நரகம்" என்று சொன்ன
புரோகிதர்
இரத்த வாளுடன்
வருகிறார்.
ராமருக்கான
பலியெடுப்பை
செய்துகாட்டிய
அடியானுக்கு
"மாலை"

அந்த
இமயமலையில் நின்று
கத்துங்கள்
"எங்கள் பூமி மதச்சார்பற்றது"

- இளைய அப்துல்லாஹ்
(இலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனக்கு வெடி வையுங்கள்!
# கொலைகாரன் ஒழிக!!
# வீடமைப்பு,நிர்மாணத்துறை அமைச்சர் சதி!!!

முதலில் அத்துலத் முதலி.

அவர் கொல்லப்பட்டு எட்டாவது நாள் பிரேமதாசா.

அத்துலத் முதலி கொல்லப்பட்ட கிரிலப்பனையில். அவரது கொலைக்குப் பிறகு அதே கிரிலப்பனையில் யு.என்.பி பொதுக்கூட்டத்தில் பேசுகையில் பிரேமதாசா அவரது இவ்வளவுகால அரசியல் பேச்சுக்களின் கிளைமாக்ஸ் கட்டத்துக்கே சென்றுவிட்டிருந்தார்.

"லலித் அத்துலத் முதலி அவர்கள் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் கொல்லப்பட்டார் என்றால் அது வெறும் லலித்தின் மீதான தாக்குதல் அல்ல. ஜனனாயக வழியில் நம்பிக்கை வைத்துள்ள எம் அனைவரினதும் மீதான தாக்குதலாகும் என்றே நாம் கருதுகிறோம். இந்தக் கொலையுடன் என்னைச் சம்பந்தப்படுத்திப் பேசப்படுகிறது. ஆனால் லலித் ஒருபோதும் எனது அரசியல் வாழ்வில் சவாலாக இருந்ததில்லை. அவருடன் பதவிகட்காக மோதிக் கொண்டவர்களுக்கு இது தெரியும், மக்களுக்குத் தெரியும். என் மீது கோபம் இருப்பின் எனது உடலுக்கு வெடிவைத்து என்னை அழித்து விடுங்கள். ஆனால் நான் எனது சிறுவயதிலிருந்து கட்டி வளர்த்துப் பாதுகாத்த எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தாதீர்கள்"

ஜனாதிபதியின் கொலைக்குப் பின் 6 நாட்கள் தொடர்ந்து மௌனமாக துக்கம் அனுஷ்டித்த ரூபவாகினியும், இலங்கை வானொலியும் அவரது கடந்தகால வரலாற்றையும், அவரது உடல்(?) வைக்கப்பட்டிருந்த பேழையைச் சுற்றிக் கண்ணீர் விட்டு அழுத ஆதரவாளர்களையும், உறவினர்களையும் திரும்பத் திரும்பக் காட்டியதுடன் மேற்கூறிய அவரது பேச்சையும் திரும்பத் திரும்ப ஒலிபரப்பியதன் மூலமாக 17ஆம் திகதி நடக்கவிருக்கும் மாகாணசபைத் தேர்தலுக்கான பிரச்சாரத்தை மிகவும் சிறப்பாக நடாத்தின.

லலித்தின் கொலையின் மூலம் அனுதாப ஆதரவைத் திரட்ட டி.யூ.என்.எப் கட்சிக்கு அவ்வளவாக வாய்ப்புக் கிடைக்கவில்லை. யூ.என்.பி.க்கு பிரேமதாசாவின் கொலை நல்ல வாய்ப்பைக் கொடுத்துள்ளது. சரிந்து கொண்டிருந்த ஆதரவைத் தூக்கி நிறுத்த நல்ல வாய்ப்பாக இக் கொலை இருந்தது.

இந்த 6 நாள் துக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஷ்டிப்பின் உச்சக்கட்டமாக நடந்த இறுதிக் கிரியைகளின்போது சற்றும் எதிர்பாராத விதமாக ஹேமா பிரேமதாசா மேடையில் தோன்றித் தனது கணவரின் இடத்துக்குத் தன்னைப் பிரேரியுங்கள் என்று கேட்காத குறையாக தனது நன்றியுரையைக் கூறி முடித்தார்!

எப்படியோ யு.என்.பி.யின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டி.பி. விஜயதுங்கவின் பதவியேற்பும், அதைத் தொடர்ந்த மந்திரிப் பதவியேற்புகளும் பிரேமதாசாவின் மனைவிக்கு இத்தகைய வாய்ப்புகள் கிடைக்கும் எனக் காட்டவில்லை. எல்லாம் மிகச் சுமுகமாகவே நடப்பதாகவும், யு.என்.பி. இந்தக் கொலையால் பெரிதும் பாதிக்கப்படவில்லை என்பது போலவும் நடந்து முடிந்தன.

லலித்தின் கொலை ஏற்படுத்தியிருந்த உணர்வலைகளைத் தனது முட்டாள்தனத்தால் மேலும் தீவிரப் படுத்தியது அரசு. புலிகளே இக் கொலையைச் செய்தார்கள் என்று நிருபிப்பிதற்காக யாரோ ஒருவரை சுப்பையா பாலகிருஷ்ணன் என்ற போலி அடையாளச் சீட்டுடன் கொலை செய்து போட்டார்கள். ஆனால் இரண்டொரு நாளிலேயே லலித்தின் கொலையைச் செய்ததாக அரசால் காட்டப்பட்ட நபர் கிரிலப்பனை பொலிஸில் ஏற்கெனவே கைதாகிக் காவலிலிருந்த ஒருவர் என்பது ஊரறிந்த இரகசியமாகப் பரவியது. தவிரவும் அக் கூட்டத்திற்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டாமென கிரிலப்பனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வழங்கப்பட்டிருந்ததாக அவரே பத்திரிகைகளுக்கு கூறியிருந்தார். இந்த நடவடிக்கைகள் எல்லாம் யு என்.பி.தான் - குறிப்பாக பிரேமதாசா தான் - இக் கொலைகளுக்குக் காரணம் என்ற பொதுவான அபிப்பிராயம் தென்னிலங்கையில் மிகத் தீவிரமாகப் பரவக் காரணமாயின. போதாதற்கு, தான் பாதுகாப்பு வழங்குவதிலிருந்து தடுக்கப்பட்டதாகக் கூறிய கிரிலப்பனை ஓ.ஐ.சி.யை இடமாற்றம் செய்ததுடன், அவரை `எப்படியோ` கொன்றுவிட்டார்கள் என்ற செய்தியும் பரவியது. இது மேலும் பிரேமதாசா மீதும், யு.என்.பி மீதும் மிகத் தீவிரமான எதிர்ப்புணர்வை உருவாக்கி விட்டிருந்தது. இந்த நிலையில் பிரேமதாசா கொல்லப்பட்டது புலிகளால் ஆகவே இருக்கும் என்பது பெரிய விடயமாக யாராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

யு.என்.பி.யினரே சொன்னதுபோல முதலில் பிரேமதாசாவின் `நற்பெயர்` முற்றாக அழிக்கப்பட்டது. பத்திரிகைகளும், எதிர்க்கட்சிகளும் இதில் தீவிர பங்காற்றின. பத்திரிகைகளை பகைத்துக் கொண்டதால் அவருக்கு எதிராக வந்த எந்த குற்றச்சாட்டுகளையும் - அவற்றில் உண்மையிருந்தால் என்ன இல்லாவிட்டாலென்ன - அவரால் மறுத்துரைக்க முடியவில்லை. அரசு சார்பு பத்திரிகைகளையும், வானொலி, வானொலியையும் யாரும் கணக்கெடுக்காத அளவுக்கு நிலமை உருவாகி இருந்தது. பிரேமதாசா ஒரு பயங்கரமான கொலைகாரன் என்ற விதத்திலான அபிப்பிராயம் மிக நன்றாகவும், பலமானதுமான அத்திவாரமாகப் போடப்பட்டிருந்தது. எனவே அவரது முடிவு மிகவும் தர்க்க ரீதியானதாக, நியாயமானதாக, இலகுவில் ஏற்றுக்கொள்ளப்படுவதாக ஆகிப் போயிற்று.

உண்மையில் புலிகளால் என்றால் என்ன, யாராலாயிருந்தால் என்ன பிரேமதாசா கொல்லப்படுவது நியாயமே என்ற நிலையே பலமாக வேரூன்றி இருந்தது எனலாம். டி.யூ.என்.எப்.பினரே இதைச் செய்திருக்கலாம் என்ற ஊகத்தை மறுக்கவோ, புலிகள் இதைச் செய்திருக்கலாம் என்ற பொலிஸாரின் நியாயங்களை அப்படியே வழமைபோல் ஏற்றுக்கொள்ளவோ அரசுகூட முயலவில்லை. யார் கொலையாளி என்பதை நிலைநாட்ட முய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்வதைவிட இயல்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்ட கொலையை ஒரு பேரிழப்பு என்று காட்டுவதிலேயே அரசு அதிக நேரத்தை ஒதுக்க வேண்டி இருந்தது.

இதேவேளை இந்தக் கொலையை அடுத்து தமிழர்கட்கு எதிரான தாக்குதல் பரவலாக நடக்கலாம் என்றதொரு பெரிய அச்சம் இங்கு நிலவியது. பலர் வவுனியாவை நோக்கிச் செல்லத் தொடங்கினர். குணசிங்கபுர தொடர்மாடி வீடுகளில் வசித்துவந்த பல தமிழ்க் குடும்பங்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தன.

ஒரு இனக்கலவரம் வராது தடுக்கத் தன்னால் முடியுமான சகல வேலைகளையும் தான் செய்வதாக புதிய ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்க தமிழ் எம்.பி.க்களுக்கு உறுதியளித்ததுடன் ஊரடங்குச் சட்டமும் பிறப்பித்திருந்தார் என்றபோதும் தமிழ் மக்களிடையே இருந்த அச்சம் குறைந்தபாடில்லை. தெரிந்த சிங்கள நண்பர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்தவர்கள்; பொலிஸில் முறையிட்டு தாம் தங்குமிடங்களுக்கு விசேட காவல் போடுவித்தவர்கள்; வவுனியா நோக்கிச் சென்றவர்கள் போகத் தடிகள், பொல்லுகளுடன் பலர் ஒன்றாகச் சேர்ந்து சிலசில வீடுகளில் தங்கியதுமாக தமிழ் மக்கள் தமது பாதுகாப்பைத் தாமே ஒழுங்கு செய்து கொண்டார்கள். அதிலும் குறிப்பாக தடிகள், பொல்லுகளுடன் இருந்தவர்களது அபிப்பிராயமாக இருந்தது என்னவென்றால், 1977, 1983 போலல்லாமல் 1993 இல் கொழும்பிலுள்ளவர்களில் பலருக்குப் போக்கிடம் இல்லை என்பதுதான்! வடக்கு, கிழக்கை விட்டு ஓடிவந்த இவர்களுக்கு கலவரம் தொடங்கினால் திரும்ப அங்கும் போக முடியாது என்பது பெரும் திகிலூட்டும் அனுபவமாகவே இருந்தது!

தமிழர்கள் மத்தியில் அப்படி ஒரு அச்சம் இருந்தபோதும், பிரேமதாசாவின் கொலை ஒரு இனக்கலவரத்தைத் தூண்டும் சக்திமிக்கதாக இருக்கவில்லை என்பதே உண்மை. நாட்டில் நடந்த தொடர்ச்சியான வன்முறைகள், றிச்சட் டி சொய்ஸா முதல் அண்மைக்கால கொலைகளான றஞ்சன், கொப்பேக்கடுவ உள்ளிட்ட 9 இராணுவத்தினர், கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ, லலித் அத்துலத்முதலி ஆகியோரின் கொலைகளை பிரேமதாசா தான் செய்திருக்க வேண்டும் எனப் பரவியுள்ள ஊகம், முன்னாள் டி.ஐ.ஜி உடுகம் பொல வெளிப்படுத்திய திடுக்கிடும் இரகசியப் படு



"உங்கடை பிள்ளையளுக்கு தமிழ் சொல்லிக் குடுக்க இனி வேறை வாத்தியாரைப் பாருங்கோ"

"என்ன வாத்தியார் உப்பிடிச் சொல்லிப் போட்டியள்?"

"பின்னை என்ன. கவுண்டமணி, செந்தில் மாமாமார் கதைக்கிற மாதிரி நான் படிப்பிக்கிற தமிழ் இல்லையெண்டு படிக்க மாட்டாங்களாம்"

*- இன்னன்னா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகள் பற்றிய தகவல்கள், பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள் என்பன அவரைப் பற்றி இங்கு நிலவிய அபிப்பிராயங்கள். பிரபாகரனைப் பற்றி நிலவும் அபிப்பிராயங்களைவிட சிறப்பானதாக இருக்கவில்லை.

பிரேமா ஆமர் வீதியில் கொலையுண்ட செய்தி கேட்டுப் பல இடங்களில் மக்கள் வெடி கொழுத்தி ஆரவாரம் செய்ததே போதும் பிரேமா கொலை பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்ள. தவிரவும், 17 ஆம் திகதி வரவுள்ள தேர்தல் அரசுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது. அதில் குழப்பம் ஏற்படுவதை அரசு விரும்பவே இல்லை. தவிரவும், கொழும்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் வாக்காளர் தொகை 1 இலட்சத்திற்கு மேல் அதிகம் என்பதும், இவர்களில் பெரும்பாலானோர் யு.என்.பி.க்கு வாக்களிப்பார்கள் என்பதும் மிக முக்கியமான காரணிகள் எனலாம்.

ஈ.பி.டி.பி. க்குத்தான் இந்தக் கொலை கவலை தரும் விடயமாக அமைந்தது. லலித்தின் கொலையையடுத்து எழுந்த பொதுமக்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் ஆத்திரம் ஈ.பி.டி.பி.யை உடனடியாகக் கொழும்பை விட்டுக் கலைக்க வைத்தேவிட்டது. அவர்கள் திருகோணமலைக்கு ஓடிப் போகவேண்டிய அளவுக்கு இங்குள்ள நிலமை மோசமடைந்திருந்தது!

பிரேமதாசா கொலை செய்யப்பட்ட மேதினத்தன்று எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்திருந்த அனைத்து கூட்டங்களிலும் பிரதான முழக்கமாக இருந்தது 'பிரேமதாசாவின் கொலைகார அரசாங்கம் ஒழிக', 'கொலைகார பிரேமதாசா ஒழிக' என்பவையே. வழமைபோல திட்டமிட்டபடி பெருமளவுக்கு அரச ஊழியர்களையும், ஆடைத் தொழிற்சாலைப் பெண்களையும் மேதின ஊர்வலத்திற்கு கட்டாயமாக அழைத்துவந்தும் எதிர்பார்த்த அளவு கூட்டம் யு .என்.பி.க்குச் சேரவில்லை. கூட்டம் அதிகம் சேரவில்லை என்பதால் வந்துள்ளவர்களை ஒழுங்குபடுத்தும் வேலையைப் பிரேமதாசாவே செய்தார். ரூபவாஹினிப் படப்பிடிப்பாளர்களைப் படம் எடுக்க வேண்டாம், ஆட்கள் சேர்ந்ததும் எடுக்கலாம் என்று கூறி நிறுத்தினார். இதனால் அவரது கொலை படமாக்கப்படவில்லை என்கிறார்கள் ரூபவாஹினி ஊழியர்கள்!

இறுதி ஊர்வலத்திலும் கூட அவ்வளவாக - பத்திரிகைகள் 10 இலட்சம் என்று எழுதியபோதும் - 'சனம்' சேரவில்லை என்பதே உண்மை. எந்தப் பிரச்சாரமும் இல்லாமல் நடந்த லலித்தின் மரணச் சடங்குக்கு வந்திருந்த சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் இது - அளவில் அதிகமாயினும் - குறைவே.

OO

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி தாம் புலிகளுடன் பேசத் தயார் என்றும், புலிகள் எப்போது வேண்டுமென்றாலும் பேச வரலாம் என்றும், தமது கதவுகள் என்றும் போல் திறந்தே உள்ளன என்றும் அறிவித்துள்ளார்!

வழமையான அழைப்புத்தான். ஒரு பக்கத்தில் யுத்தத்தை நடாத்த உத்தரவிட்டுக் கொண்டே இன்னொரு பக்கத்தில் சமாதானத்திற்குத் தயார் என்று பசப்புவது பிரேமதாசாவுக்கு மட்டுமல்ல அவரது கதிரையில் உட்காரும் யாவருக்கும் இயல்பாகவே வருகின்ற நோய்தான் என்பது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இன்னொரு வதந்தி உலாவுவதும் குறிப்பிடப்பட வேண்டும். இந்தக் கொலைக்குக் காரணம் யு.என்.பி.க்குள்ளே உள்ள சதியே என்று தாம் சந்தேகிப்பதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன. வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரான சிறிசேன குரேயே லலித்தின் கொலைக்கும், பிரேமதாசாவின் கொலைக்கும் காரணம் என்று பேசப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. பிரேமதாசாவைக் கொல்லாமல் யு.என்.பி.க்குள் இன்னொரு தலைமை உருவாகி வருவது என்பது சாத்தியமற்றது என்ற உண்மை அவரது கொலைக்கு முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது. இக் கொலையில் எப்படியோ சில யு.என்.பி. உறுப்பினர்கட்கு பங்கு இருக்கிறது என்பது நிச்சயம் என்று பொதுவாகவே பேசப்படுகிறது.

யு.என்.பி.யால் அச்சடித்து வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் பிரசுரம் ஒன்று சிறிசேன குரேயே லலித்தின் கொலைக்குக் காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளது.

OO

புது ஜனாதிபதி விஜயதுங்க ஒரு எடுப்பார் கைப்பிள்ளை என்பது பலரது அபிப்பிராயம். தனி மனிதனது கட்டுப்பாட்டுக்குள் நின்று அனைவரும் இயங்க வேண்டியிருந்த சுதந்திரமற்ற தன்மை பிரேமதாசாவால் உருவாக்கப்பட்டது. எந்தவிதமான அதிகாரங்களும் அற்ற வெறும் லேபிள்களாக மந்திரிப் பதவிகளை மாற்றி விட்டவர் அவர். இந்தப் பதவிகளும் அவற்றின் நடவடிக்கைகளும் தன்னை ஒரு மகாசக்தியாக காட்டப் பயன்படும் கருவிகளே என்பது அவரது அபிப்பிராயமாக இருந்தது.

ஆனால் விஜயதுங்கவுக்கு அதற்குரிய ஆளுமை இல்லை. தவிரவும் அவர் எம்.பிக்களின் பிச்சையால் ஜனாதிபதியானவர். அந்த நன்றிக்கடன் அவருக்கு இருக்கும்! மந்திரிகள் இனி ஓரளவு சுதந்திரமாகச் சுவாசிக்கலாம். றேடியோவிலும், பத்திரிகைகளிலும், ரூபவாஹினியிலும் தோன்றலாம். சுதந்திரமாகக் கொள்ளையடிக்கலாம். டிங்கிரி பண்டா பிரேமதாசா மாதிரி `ஸ்கூல் பிரின்சிப்பல்` வேலை பார்க்கப் போவதில்லை என்பதில் அனைவருக்கும் திருப்திதான்!

எல்லோரும் வாயூறிப் பார்த்திருக்க தான்மட்டும் புசித்தவர் பிரேமதாசா என்றால், இவர் எல்லோரும் செய்வதை நியாயப் படுத்திக் கொண்டு அதன் காரணமாகவே மதிப்பைப் பெற்றவராக இருப்பார் என்று பரவலாகப் பேசப்படுகிறது.

OO

இதுதான் இன்றைய நிலமை

உலக வங்கிகட்கும், இந்தியாவுக்கும் நல்ல வாய்ப்பு. எல்லோருக்கும் நல்லவனாக இருக்கப் போகிற `கண்ணியம் மிக்க` தலைவரான விஜயதுங்கவின் ஆட்சியிலும் இன்றைய நிலமை அப்படியேதான் இருக்கப் போகிறது. வந்ததும் வராததுமாக தமிழ் மக்களுக்கு பிரச்சினையே இல்லை என்று கூறியிருக்கின்றார் அவர். உள்ள பிரச்சினை வெறும் பயங்கரவாதிகளின் பிரச்சினையாம்!

OO

எமது அரசியல் நண்பரின் அபிப்பிராயம் இது:

"பிரேமதாசாவின் மரணம், அதற்கு முதல் நடந்த மரணம் இரண்டும், அதன் பின்னாலான மக்கள் உணர்வுகளும் தெளிவாகத் தெரிவிப்பது ஒரே விடயத்தைத்தான். அதாவது இவர்கள் வாய் கிழியப் பீற்றுகிற ஜனனாயக வழியில் இவர்களுக்கே நம்பிக்கை கிடையாது என்பது. துப்பாக்கிக் கலாச்சாரம் பரவிவிட்டதாக ஓலமிடுகின்ற கட்சிகளும், பத்திரிகைகளும் உண்மையைக் காணத் திட்டமிட்டு மறுக்கின்றன. எல்லாக் கட்சிகளின் பின்னாலும் குண்டர் படைகள் இருக்கின்றன. எதிர்க்கட்சிகளை தாக்குதல், உறுப்பினர்களை மிரட்டுதல், தேவைப்பட்டால் கொல்லுதல், வாக்குகளைத் திருடுதல், கள்ள வாக்குகளைப் பதிவு செய்தல்... இப்படியான வேலைகட்காக நவீன ரக ஆயுதங்களுடன் குண்டர்கள் உள்ளனர். இதில் முன்னோடி யு.என்.பி. இக் கட்சிகள் தாம் கூறும் ஜனனாயகத்திற்கு எதிராக தாமே வன்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் பிரயோகிப்பவர்கள். அதன் மூலம் அந்த ஜனநாயகத்தின் பொய்மையை நிரூபித்தவர்கள். துப்பாக்கியை முதுகுக்குப் பின்னால் மறைத்துக் கொண்டு இவர்கள் துப்பாக்கிக் கலாச்சாரம் பற்றிப் பேசுகிறார்கள்.

பிரேமதாசா மட்டுமல்ல, இந்தப் போலி ஜனநாயகத்தின் காவலர்கள் எல்லோரும் தமது நடவடிக்கைகட்கு ரத்தத்தால் பதில் சொல்லித்தான் ஆகவேண்டி உள்ளது. துப்பாக்கிக் கலாச்சாரம் அல்ல உருவாகி வருவது: இப் போலித்தனம் கொஞ்சம் கொஞ்சமாக அம்பலமாகி வருவதே நடந்து கொண்டிருக்கிறது.

பிரேமதாசா போனால் டிங்கிரி பண்டா. அவர் போனால் இன்னொருவர். தூக்கி எறியப்பட முடியாதவர் கொல்லப்படுகிறார். பயந்தவர்கள் தாமாகவே விலகுகிறார்கள். நிலமைக்கு ஏற்ப சாதகமானவர்கள் பதவியில் அமர்த்தப்படுகிறார்கள்.

ஆட்சித் தலைவர்கள் மாறுவார்கள் தம்முள் உள்ள முரண்பாடுகளால். ஆனால் ஆட்சி மாறாது. அது மாற்றப்பட வேண்டும். அது ஆள்பவர்களின் முரண்பாடுகளால் அல்ல. எமக்கும் அவர்களுக்குமுள்ள முரண்பாடுகளால்!"

- பிரஜைகள் (ஈழம்)

## காற்றுக்கு ஒரு மகசர்

காற்றைப் பிடித்துக் கட்டிப்போடு!
வெளவால்கள் கடித்துப் போட்ட -
கொய்யாக்கனியாகிவிட்ட
இந்த ராஜ்ஜியத்தைப் பற்றி
காற்றிடம் கொட்டு...

காலிமுகத்திடலில் வந்தமரும்
வாடகைத் தேவதைகளாய்
ஒவ்வொருநாளும்-
உன் முற்றத்து மல்லிகையுடன்
உரசிக்கொள்ளவரும்
காற்றிடம் கவலையைச் சீறு!

இந்தத் தோட்டத்துப் பூக்களுடன்
தொட்டு உறவாடிவிட்டு -
சும்மாவல்லவா போகிறது
நூலகத்தில் செய்தித்தாள் படிப்பவன்போல..

பிடி! காற்றைப்பிடி -
கள்வனைப்போலல்ல
காதலியைப்போல...
இல்லாவிட்டால் வாசற்படியில் நின்று
வாய் கிழியக் கத்து!

அதிதியாய் வந்தமரும்
நமது அரசியல்வாதிகள் போலல்ல...
காற்றுக்கு கண்ணில்லாவிட்டாலும்
காதிருக்கிறது
கருத்தை உள்வாங்கிக் கொள்ளும்!

மகஜரை எழுது! வாசித்துக் காட்டு
மைக்குக்கு முன்னால் அல்ல -
மாங்குஸ்தான் மரக்கிளையில் வந்தமரும்
காற்றுக்கு முன்னால்...

- ரீ.எல்.ஜவ்பர்கான் (ஈழம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கையறு நிலை !

[சென்ற இதழ் தொடர்]

பாடசாலையில், காலையில் அல்லது இரவில் குண்டுச் சத்தம் கேட்டால் மாணவர்கள் இல்லை. ஸ்ராவ் றூமில் விரக்தி தோய்ந்தபடி இருக்க வேண்டும். தர்மூ, நாதன் வந்தால் கொஞ்சம் பேச்சுத் துணை. அப்படியே குணா கடைக்குப் போகலாம். பிளேன்ரீ குடிக்கலாம். முன்புற வாய்க்காலில் தண்ணீர் ஓடியபடி இருக்கும். வெயில் சுட்டெரிக்கும். அரைகுறையாகப் பாடசாலை விட மதியம் சாப்பிடப் போகலாம். வந்து கொஞ்ச நேரம் படுக்கலாம். பிறகு குழப்பமானதொரு பின்னேரத்தைச் சந்திக்கலாம்.

ஒருநாளின் மாலைப் பொழுது என்பது எவ்வளவு அழகானது. குதூகலமானது. எவ்வளவு நீண்ட கோடைப் பொழுதாயினும் மாலைப் பொழுது அலுப்பை, சலிப்பைத் தருவதில்லை. ஆனால் இப்பொழுது பின்னேரங்கள் குழப்பமாயிருக்கிறது. விரக்தி தோய்ந்தபடி மாலைப் பொழுது பூமியில் பரவுகிறது.

மனதில் என்னவோ இனம் புரியாத சோகம். எதையோ இழந்து கொண்டிருக்கிறேன்.

சுசி குட்டியன்களிற்குச் சீனிக்கு, பால்மாவிற்கு என்ன செய்வாள்? சுசியிடம், பிள்ளைகளிடம் ஓட வேண்டும். அதுதான் சரியானது.

ஆனால் என்னைத் தடுப்பது எது? சில மாணவர்கள் ஒரு பாடத்திற்கு என்னை மாத்திரம் நம்புகிறார்கள். நான் தவறு செய்ய நேர்ந்தால் அவர்கள் எதிர்காலம் பாதிக்கப்படலாம். நான் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும்.

என்னைப் பேயனாகக் கருதுவார்களா? யார்? நான் நேசிக்கிற மாணவர்களா?

நான் நினைக்கவில்லை.

ஆனால் வேதனைக்குரிய விசயம் இதுதான். இந்த இனிய உலகமும் சிதைகிறது. நான் நம்பிய சந்தோசமான இந்தச் சின்ன உலகமும் சிதைகிறது.

சீதாவும், வத்சலாவும் வருகின்றபோது வாசந்தி, சரசு, மூர்த்தியைக் காணவில்லை. சரசு, மூர்த்தி, வத்சலா வருகின்றபோது சீதாவையும், வாசந்தியையும் காணவில்லை. ஒரு நாள் சீதா மாத்திரம் வருகிறாள். மறுநாள் வத்சலா மாத்திரம் இருக்கிறாள். மூர்த்தியைப் பிறகு ஒரு போதும் காணவில்லை. பலநாட்கள் வகுப்பறை வெறிச்சிட்டு இருக்கிறது.

நான் குளித்து வெளிக்கிட்டு வேதனையைச் சுமந்தபடி வருகிறேன். சுசி, குட்டியன்கள் போன அன்று மாத்திரமே வேதனையைச் சுமந்து வகுப்புக்குப் போனேன் என்று நினைத்தேன்.

ஒரேயொரு பல் மாத்திரம் ஓடியது. மிகவும் அதிகாலையில் பல் டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போவுக்குள் சென்று பஸ் ஏற்றினேன். அந்த விடிய ப் புறத்திலும் பஸ் சனத்தால் நிரம்பி வழிந்தது.

"அப்பாவும் வாங்கோ" என்று பெரியவன் கத்தினான். "அப்பா, அப்பா" என்று சிணுங்கினான் சின்னவன். வேதனை வந்து நெஞ்சைப் பிழிய வெம்பும் பொருமலுடன் சுசி போனாள்.

பஸ் புறப்பட்டது. அவர்கள் சுகமாய்ப் போய்ச் சேர யாரைப் பிரார்த்திப்பேன்? என்னடா வாழ்க்கை இது? சந்தோசமாக, சின்னதாக இருந்த குடும்பத்தை ஏன் இப்படிச் சிதைக்கிறார்கள்?

மூதனாள் பின்னேரம் குட்டியன்களைக் கட்டிப்பிடித்தபடி இருந்தேன். நெஞ்சை வலி தாக்கத் தாக்கச் சிரித்து விளையாடினேன். "குண்டா, குண்டா" என்று ஓடி வந்தார்கள். "குட்டிப் பையா" என்று தூக்கிக் கொஞ்சினேன்.

பஸ் ஏற்றிய அன்று எனக்குப் படிப்பிக்க இயலாமல் போனது. அன்று மாத்திரம்தான் அந்த வேதனை என்று நினைத்தேன். ஒரு முள் குத்தியது போல எப்பொழுதும் நிரந்தரமான அந்த வலி. யார் அந்த முள்? எது என்னை இப்படித் துரத்துகிறது?

நிறைய வேலை. மூசி மூசிச் செய்கிறோம். உற்சாகமான காலம். சாமம் சாமமாகக் காட்டுக்குள் சுற்றியிருக்கிறோம். கடலுக்குள் மாண்டுபோன தோழர்களை எண்ணி கண்ணீர் வடித்திருக்கிறோம். தீவுகளின் கடற்கரைகளில் மணலை அளைந்தபடி அரசியல் வகுப்பு நடத்தியிருக்கிறோம். தோட்டம் கொத்தி வாழைச் சருகு சரசரக்க ஆயுதம் புதைத்திருக்கிறோம். மண்ணை, மனிதனை நம்பியிருக்கிறோம். "மண்ணை மனிதனை விட மேலாகிவிட்ட துவக்குகளை வீசியெறிவோம் கடலுக்குள்" என்று தோழர் ஒருவர் கவிதை பாடியபோது முதுகில் தட்டிக் கொடுத்து ஆரவாரித்தோம். "மக்கள் சக்தியே மாபெரும் சக்தி. வெடிகுண்டையும் மிஞ்சிய சக்தி" என்று இன்னொரு தோழர் பாடி ஆடியபோது அவன் உடலில் தெறித்த கனலைக் கண்டு வியந்தோம். பத்திரிகை வெளியிட்டு விநியோகித்தோம். கிராமம் கிராமமாகக் கருத்தரங்கு நடத்தினோம். இராணுவப் பயிற்சி எடுத்தோம்; கொடுத்தோம். ஓய்வுக்குள் தலை புதைக்க மறுத்தோம். இந்த உலகை வெற்றி கொள்வோம் என்பதில் அசையா நம்பிக்கை.

எல்லாம் சிதைந்து போயிற்று. எல்லாவற்றையும் எங்களிடமிருந்து பிடுங்கி எறிந்தாயிற்று. நாங்கள் அரசியல் அநாதைகளானோம். நாங்கள் நம்பிய உலகம் எங்களிடம் இல்லை. நாம் நம்பிய மனிதர் நமக்கு அந்நியர் ஆக்கப்பட்டனர். நம் உலகமும், மனசும் சுக்கு நூறாகியது.

இதுவெல்லாம் எப்படி என்று என்னிடம் கேளாதீர்கள்.

வரதனிடம் கேட்டேன். "தோழர் நாங்கள் உங்களுக்கு என்ன செய்தோம்? ஏன் எங்களை அழிக்கிறீர்கள்?"

"என்னட்டை ஒண்டும் கேளாதை. பெரியவர் வரட்டும்"

பெரியவர் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஞானப் பார்வை. அருகில் போனேன். அதிகாரம் தொனிக்கிற கணீரென்ற குரலில் சொன்னார்:"உங்களுக்கு ஏலுமென்டால் எங்களை அழித்துவிட்டு நீங்கள் அரசியலை நடத்துங்கோ. ஒராள்தான் இருக்கலாம். அது நீங்களோ, நாங்களோ தீர்மானியுங்கோ"

ஒன்றும் பேசவில்லை. உள்ளுக்குள் போய்விட்டார். சிறிது நேரத்தில் வரதன் வந்து,

"உனக்கு ஒண்டும் நடக்காது. நீ வீட்டை போய் இரு. நான் உறுதி தாறன். வீட்டை விட்டு வெளிக்கிடாதை. தாடியை வெட்டு. சுத்தமாய் நல்ல பிள்ளையா இரடாப்பா. போய்ப் படி. எந்தக் காரணம் கொண்டும் எந்த அரசியலிலையும் இனி இறங்காதை" முதுகைத் தடவிக் கொண்டுதான் சொன்னான்.

"எங்கன்ரை தோழர்களை என்ன செய்யப் போறீங்கள்? அவர்கள் உயிருக்கு உத்தரவாதம் இருக்கா?"

"எதிர்க்காமல் ஆயுதங்களை ஒப்படைச்சு சரணடைஞ்சால் அவர்கள் உயிருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நான் உத்தரவாதம். பழைய பிழையள் நாங்கள் விடமாட்டம்"

போனேன். ஷேவ் எடுத்தேன். அரசியல் புத்தகங்களைக் கட்டிக் கூரைக்குள் எறிந்தேன். கண்ணாடியைக் கழட்டிச் சுழட்டி வீசினேன். சுக்குநூறாகியது. 'உலகம் மங்கலாக இருக்கட்டும்' தலைக்கு மூழுக்குப் போட்டேன். அறையைப் பூட்டிக் குமுறிக் குமுறி அழுதேன்.

அடுத்த நாள் இன்னும் முடிக்காத பல்கலைக்கழகப் பரீட்சைக்கான பாடப் புத்தகங்களை, குறிப்புகளைத் தேடத் தொடங்கினேன்.

அத்துடன் மௌனமானதுதான். ஒரு உலகமும் இல்லாமல் போனதுதான். பட்டதாரியாகி, காதலித்த சுசியைக் கைப்பிடித்து, இரட்டைக் குழந்தை பெற்று இன்னொரு உலகம் தேடினதுதான். விரக்தியை மென்று விழுங்கியதுதான்.

மறந்தும் அரசியல் கதைக்கவில்லை. மனசறிந்தும் துரோகம் செய்யவில்லை. உழைத்தேன். சொந்தக் காலில் நின்றேன். எனக்குப் பிடித்த ஆசிரியர் வேலை கிடைத்தது. கிடைத்த பாடசாலை மற்றொரு உலகம். சின்ன, அழகிய உலகம்.

ஒருமுறை அரசியல் வேலை செய்த காலத்தில் காடு தாண்டி, குளம் தாண்டி, ஒரு பக்கம் வாய்க்கால் சேர்ந்துவர, வயல் செறிந்த ஒரு வீதியால் போனோம். வாய்க்காலில் தண்ணீர் பொங்கிப் பொங்கிப் பாய்ந்தது. ஆங்காங்கு சிறுவர் கும்மாளமடித்தனர். இடையிடை தென்னந்தோப்பு. வயலில் நெற்கதிர்கள் சாய்ந்து நிற்கும் நேரம். பனி விலகிய காலைப் பொழுது. நெல்லின் மணம் மூக்கைத் துளைத்தது. அருகில் மூன்று மாடிக் கட்டிடம். ஒரு பாடசாலை. மகாவித்தியாலயம். முன்னால் மெல்லிய நடைபோடுகிற வாய்க்கால். பெரிய நிழல் மரங்கள். நாவல், வாகை, தென்னை, அரச மரங்களுக்குள் அடக்கமாகக் கம்பீரமாக நின்றது பாடசாலை. மாணவர்கள் சீருடையுடன் திரிந்தனர். பக்கத்தில் பெரிய மைதானம். இரு கரைகளிலும் கோல் போஸ்ற். கரையில் வரிசையாகத் தேக்கு மரம். அதற்கப்பால் தென்னந்தோப்பு. ஒரே குளிர்மையான சூழல்.

இங்கு படிக்கிற மாணவர்களுக்கு மனசு விசாலமாக, குளிர்மையாக இருக்கும். அழகை ரசிப்பார்கள். இவர்கள் கெட்டிக்காரர்களாகத் திகழ்வார்கள். இங்குள்ள ஆசிரியர்கள் பெருந்தன்மையுடன் இருப்பார்கள். புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவார்கள். இக் கட்டிடம் போலவே அதிபர் மனது உயர்ந்து விம்மி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மாணவர்களிடம் காதல் இயல்பாகப் பெருக்கெடுக்கும். அந்தச் சிங்கள நாவலில் வருகிற சுகத்தும், தமயந்தியும் போல இங்கும் ஒரு சோடி மாணவர்கள் காதலை மௌனத்தில் புதைத்து வைத்திருப்பார்கள். மைதானத்தில் அவன் விளையாடும்போது அவள் ரசிப்பாள். மண்டபத்தில் அவள் பாடும்போது அவன் மௌனமாய் உருகுவான். முதற்காதல் இங்குதான் அரும்பும். நெஞ்சு பதைக்கும். மனசு ஏங்கும். மலர்ச்சியான புன்னகையை அவள் அளிப்பாள். குளிர்மையான பார்வை ஒன்று போதும். புன்னகையின் சிறு மின்னல் வெட்டு நெஞ்சைத் தைக்கும். புன்னகைக்காவிடினோ பொழுது கருகும். இளம்பருவக் கோளாறு இது என்பார்கள். இல்லை. இதுதான் இயல்பு. அநேகமாக இக் காதல் பாடசாலை வாழ்வோடு மண்டபத்திலேயோ, மைதானத்திலேயோ புதைந்து போகும். நிறைவேறாது. நிறைவேறாக் காதலை எண்ணி ஏதோ ஒரு காரணத்தால் ஏங்குவார்கள். என்ன அற்புதமான வாழ்வு இது!

அழகான கம்பீரமும், வீர்யமுமிக்க ஒரு பாடசாலை.

ஆச்சரியம். இந்தப் பாடசாலைதான் எனக்குக் கிடைத்தது. எப்பேர்பட்ட சந்தோசம் இருக்கும்.

இதுவே எனது உலகம் ஆனது.

வாழ்வு நன்றாகப் போனது. ஆறு மணி நேரப் பாடசாலை வாழ்வு சொர்க்கமானது. அவசரத்திற்கு லீவு எடுக்கவும் மனம் ஏற்பவில்லை. சக ஆசிரியர் சிலர் நெருங்கி



ய நண்பராயினர். குமார், நந்தன், ஆனந்தன், தர்மு, நாதன்.

அவ்வாறே மாணவர்களும் நண்பரானார்கள். அது சரியா? நான் இது பற்றி ஒருக்காலும் விவாதிக்கவில்லை. சிலவேளை தலைக்குமேல் ஏறினார்கள். குழம்பினேன். நண்பர்களாவது ஒரு கட்டம் மட்டுமே. பாடநேரங்களில் ஒழுக்க சமயங்களில் கடுமை காட்டினேன். எல்லாம் சரியாக வந்தது.

நான் அவர்களுடன் இரண்டறக் கலந்தேன்.

ஒவ்வொருநாளும் புதிய புதிய பூச்செண்டுடன், மேசை விரிப்புடன் எனது வகுப்பு அழகுபட நின்றது. மாணவர்கள் குழப்படி விட்டார்கள். குறும்பு செய்தார்கள். ரசிக்கக்கூடிய குழப்படி. வாய்விட்டுச் சிரிக்கக் கூடிய குறும்பு. ரசித்தோம். சிரித்தோம். கண்டித்தோம். வருந்தினோம். படித்தோம்.

அரசியலில் முடிக்க முடியாத காரியத்தை இங்கு நிகழ்த்தினேன். இந்த உலகத்தை நேராக்கிக் கட்டியெழுப்ப முயன்றேன்.

உயர்தர வகுப்பும் முக்கியமானது. நண்பர்களானார்கள். நான் அவர்களை நிரம்பவும் நேசித்தேன். அவர்கள் பிரியப்பட்ட மலர்களை வழங்க என்னால் முடியாவிடினும் நேசித்தேன்.

சாந்தன், மூர்த்தி, சீதா, சரசு, வத்சலா, கோபிகா, வாசந்தி இவர்களெல்லாம் நான் முன்னர் இப் பாடசாலையைப் பார்த்து ரசித்த நேரத்தில் சிறுவர்களாகத் திரிந்திருப்பார்களோ? இப்பொழுது வளர்ந்து பெரியவர்களாக சகலதும் கதைக்கக் கூடியவர்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சந்தோசமான உலகம். இவர்கள் நெருங்கிய நண்பர்.

சுற்றிவர வயல் சூழ்ந்து, வாய்க்கால் ஓடி, பச்சைப் பசேலெனக் காட்சியளிக்க, குளிர்மையான காற்றால் சூழல் நிறைந்த வீட்டில் இருந்து வருகிற சீதா, கவிதை எழுதத் தெரிந்து கஷ்டப்பட்டுத் தாயைப் பராமரிக்கிற சரசு, சீரியலாகவே யோசித்து சீரியலாகவே கதைக்கிற வத்சலா, கேள்வி கேட்டால் வெட்கப்பட்டுச் சிரிக்கிற வாசந்தி, நிறையச் சோகத்தைத் தன்னுள் அடக்கி வெளியே சிரித்து வேதனையை மென்று விழுங்கும் கோபிகா, நெடுத்து மரியாதை காட்டி சீரியலான முகம் கொண்ட மூர்த்தி, கடைக்கண் பார்வையுடன் குழப்படி செய்து கெட்ட பெயர் எடுத்து மாணவர்களை வெருட்டி வைத்திருக்கும் சாந்தன் – இந்த உலகம் இனிமையில்லையென்று யார் சொல்லுவார்கள்?

இத்தகைய உலகம்தான் சிதைந்து போனது. சாந்தன் பொம்மர் அடிக்குள் அகப்பட்டான். கையை இழந்தான். அதனுடன்தான் எல்லாம் அற்றுப் போனது.

இடையிடை இருவர் மூவராக வந்தனர். ஆயினும் ஹெலி அடிக்கடி வந்து சுட்டது. பொம்மர் ஷெல் ஏவியது. அவ்ரோ பீப்பாக் குண்டு உருட்டியது. மாணவர்கள் இல்லை. பாடசாலைக்கு வெறுமனே வந்தோம்.

மைதானத்தில் சமீபத்தில் நடந்த விளையாட்டுப் போட்டியின் சுவட்டு அடையாளங்கள் இன்னும் அழியவில்லை. மாணவர்கள் இல்லை.



வத்சலாவும், சீதாவும் இறுதி மட்டும் வந்த ஞாபகம். வத்சலா விரக்தி தோய்ந்து இருந்தாள். எல்லாம் அரைகுறையாக முடிந்த உணர்வு. சுற்றிவர வயல். வயலுக்குள் நீர். வீட்டில் பதுங்குகுழி வெட்ட முடியாத துயரத்தைச் சீதா கூறினாள். கடைசியில் சீதாவைக் கண்டபோது காய்ச்சல் கண்ணைச் சிவக்கக் கலங்கி இருந்தாள்.

"நாளைக்கு வருவீர்களா? வந்தால் படிக்கலாம்" என்றேன். அது அர்த்தமேயில்லாத வெறும் வசனம்.

இனி ஒருவரையும் காணப் போவதில்லை என உள்மனது அரற்றியது. அன்று குழப்பமான பின்னேரத்தில் தாங்க முடியாத இழப்புப் பற்றிய சோகம் இருந்தது. யாருக்கு என்ன கெடுதல் செய்தோம்?

சாப்பிடுகிற வீட்டில் சாப்பாடு இல்லை என்று சொல்லியே சில நாட்களாகிவிட்டன. சாப்பாட்டுக் கடைகள் அடிக்கடி பூட்டிக் கொண்டன. தர்மு, நாதன் வீட்டில் அடிக்கடி சாப்பாடு. மனம் உறுத்தலாகி, வேதனை விரியக் கூச்சப்பட்டேன். "இது உன்ரை வீடு மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரி" என்றுதான் சொன்னார்கள். அப்படிச் சொன்னால் மட்டும் ஆயிற்றா? ஈஸ்வரன் வீட்டிலும் இடையிடை சாப்பாடு. அங்கு போய் சாவித்திரி, ரஞ்சன், வசந்தன் இவர்களுடன் கதைத்து இராப் பொழுதைக் கழித்தேன்.

காலம் எப்படி எப்படி மாறுகிறது பார். அன்பான மனைவியுடனும், ஆசையான பிள்ளைகளுடனும் என்ன சந்தோசமாக இருந்தோம். நால்வரும் பின்னேர உலா. இரவில் முற்றத்து வெளிச்சத்தில் விளையாட்டு. நிலாச் சோறு. குட்டியன்களை அணைத்தபடி படுக்கை பாடக் குறிப்புகளை தயார்ப்படுத்தல். றேடியோ கேட்டல். சாமத்தில் நிலவை, காற்றை சிறிது நேரம் ரசித்தல். இந்தக் கூட்டைக் குலைத்தது யார்?

இறுதி நாட்கள் இவை என உணர்ந்தேன். கடைசி நாட்கள் இப்படி அவலமாகக் கழிகிறது. யாரை நோக? அவரவர் மனங்களில் திருப்தியாக இருப்பார்களோ? என்னைத் தவிர.

இரவு மழை பெய்யவில்லை. தூறியது. புழுதி மணத்தது. ஹெலி அடிக்கடி உறுமி உறுமி அடங்கியது. இதுதான் கடைசி இரவு என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

விடியலிலேயே விழிப்பு வந்தது. மழை பெய்யாது மந்தாரமாக இருந்தது. குளிர்காற்று நெஞ்சைத் தாக்கியது. ஒரே அந்தகாரச் சூழல். நெஞ்சைப் பிய்த்து எறிகிற சோகம். எப்போதும் மந்தாரச் சூழல் இப்படித்தான். இன்று இன்னும் என்னை வதைத்தது. இன்னும் வலியனவாக இருந்தது.

ராத்திரி கேட்ட ஹெலியின் சத்தம் என்னவாக இருக்கும்? ஈஸ்வரன் வீடு போனேன்.

"மாஸ்ரர், ஹெலியாலை நிறைய ஆமியை இறக்கியிருக்கிறாங்கள். இஞ்சைதான் வாறாங்கள் போலை. நீங்கள் ஊருக்குப் போறதெண்டால் உடனை போறது நல்லது. வீட்டை நாங்கள் பாத்துக் கொள்ளுவம். முக்கியமான சாமானை எடுத்துக்கொண்டு போங்கோ"

"நீங்களெல்லாரும் வெளிக்கிடுங்கோவன். இஞ்சை இருக்கப் பயம் தானே?"

"நாங்கள் காட்டுப் பக்கம் ஓடுவம். உங்களுக்கு அங்கை மனிசி பிள்ளையள் பாத்துக் கொண்டிருப்பினம். நீங்கள் போங்கோ"

"பிள்ளைகளையாவது விடுங்கோவன்"

"அது பிரச்சினையில்லை. ஆகப் பிரச்சினையெண்டால் வரும் தானே"

நான் எனது விலாசத்தைக் கொடுத்தேன். "பிரச்சினை எண்டால் இஞ்சை வாங்கோ"

இதில் யோசிக்க ஒன்றுமில்லை. எனது மாணவர்கள், ஆசிரியர்கள் என்ன செய்வார்கள்? தெரியவில்லை. ஓடித் தப்புவார்கள். ஓடித் தப்பவேண்டும்.

எனது மனைவி, பிள்ளைகள் அநாதையாகக் கூடாது.

முக்கியமான சாமான்களை பெட்டியில் கட்டினேன். குமுறிக் குமுறி வந்த அழுகையை உதடு துடிக்க அடக்கி விழுங்கினேன். யன்னலைச் சாத்தி, வீட்டைப் பூட்டித் திறப்பை ஈஸ்வரன் வீட்டில் கொடுத்தேன்.

சென்று வருகிறேன் இனி எல்லோரையும் எப்போது காண்பேனோ? குறும்புகளை, சிரிப்பை, மகிழ்ச்சியை எப்போது ரசிப்பேனோ?

- அ.ரவி (ஈழம்)
*17.08.90*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படிக்கு......

## இருட்டடிப்பு எதன் மீது..?

தூண்டில் இதழ் 53+54இல் மு.நாகேந்திரம் ஐரோப்பிய சஞ்சிகைகள் தொடர்பான ஒரு விமர்சனத்தை முன்வைத்ததுடன் அது தொடர்பான விமர்சனத்தையும் கோரியிருந்தார். இதற்கென நாம் அனுப்பிய விமர்சனத்தின் ஒரு பகுதியைத் தூண்டில் இருட்டடிப்பு செய்துள்ளதுடன், பாஸிஸத்தின் மீதும், பாஸிஸத்திற்கு எதிரான சக்திகள் மீதும் ஒரே தட்டில் விமர்சனம் வைக்கும் போக்குடன் தமக்கு உடன்பாடில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

புதிய ஆசிரியர் குழு தமது அறிமுகத்தில் குறிப்பிட்ட விடயங்களை ஆராய்வோம்.

1. எல்லாக் கருத்தின் மீதும் கருத்துக் கூற முடியாது.
2. ஒரு கட்சிக்கான பத்திரிகை மட்டுமே எல்லாக் கருத்தின் மீதும் கருத்துக் கூற முடியும். அதுவே மக்களுக்குப் பிரச்சாரமும் செய்யும்.
3. எமது நிலை தேடல் கட்டமே.
4. விவாதங்கள் திசைமாறாமல் செல்வதில் அக்கறையாக இருப்போம்.

எம் மீது வைத்த விமர்சனத்திற்கும், அதேநேரம் ஆ.கு.வின் கருத்துக்குமிடையில் பாரிய முரண்பாடு உள்ளதோடு, முக்கியமான நீண்ட விவாதத்திற்குரிய ஐக்கிய முன்னணி தொடர்பான பிரச்சினையில் முடிவை தீர்மானமாக வைத்துமுள்ளனர். பாஸிஸத்திற்கு எதிரான சக்திகள் எனக் குறிப்பிட்டு, பாஸிஸத்திற்கு எதிரான சக்திகள் தொடர்பான விவாதத்திற்குக் கருத்துச் சுதந்திரத்தை மறுத்துமுள்ளனர். `ஒரே தட்டில்` வைத்தல் என்று சொன்னதன் ஊடாக, பாஸிஸத்திற்கு எதிரான சக்திகள் எனத் தூண்டில் கருதுபவர்கள் மீது விமர்சனம் உள்ளதை ஏற்றுக் கொண்டதுடன், அவர்களை எப்படி, எங்கே விமர்சிப்பது என்பதையும் சுட்டிக்காட்டத் தவறியுள்ளது.

தூண்டிலின் இந் நிலையை நாம் கடந்தகால நிகழ்வுகளுடன் சிறப்பாக ஒப்பிட முடியும். எம் மண்ணில் உருவான இயக்கங்கள் 83,84களில் இலங்கை அரசை எதிரியாகக் காட்டிப் போராடியபோது, தமக்கிடையிலான விமர்சனத்தை நிராகரித்ததுடன், மக்களின் விமர்சன உரிமையையும் நசுக்கினர். அன்றிருந்த பிரதான எதிரியான அரசுக்கு எதிரான நிலமையில் அவர்கள் வைத்த கோரிக்கையும், இன்று பாஸிஸத்திற்கு எதிரான சக்திகள் தொடர்பான தூண்டிலின் முடிவுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. புலிகளினதும், மக்களினதும் விருப்பமான `ஒரு தலைமை என்ற கோரிக்கையும், இன்று தூண்டிலின் விருப்பமான பாஸிஸத்திற்கு எதிரான சக்திகளின் ஒரு தலைமை தொடர்பான கோரிக்கையும் ஒன்றே. பாஸிஸத்திற்கு எதிரான சக்திகள் தொடர்பாக விமர்சிக்கக் கூடாது எனச் சொல்வது அன்று இயக்கத்தின் தலைமை உட்கட்சிப் போராட்டத்தை நடத்த அனுமதி மறுத்து அரசையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற இயக்கங்களையுமே பிரதான எதிரி எனச் சொல்லி நசுக்கியதைப் போன்றதே. இன்று புலிகள் மீதான விமர்சன வளர்ச்சியில் புலிகள் கூட சிலவற்றை ஒத்துக் கொள்வதுடன், எம்மை நோக்கி கோருகின்றனர் பிரதான எதிரியான அரசுக்கு எதிராக மட்டும் போராடுவோம் என்று. தூண்டில் பாஸிஸத்திற்கு எதிரான சக்திகளுக்கு எதிரான விமர்சனத்தை ஒரே தட்டில் முன்வைக்க வேண்டாம் எனக் கோருவதும் ஒரே விடயம்தான். இதிலிருந்து தூண்டில் ஆ.கு.வின் புலிகள் பற்றிய நிலை வெறும் புலி எதிர்ப்பாக மட்டும் உள்ளதைப் பார்க்க முடிகிறது.

தமது நிலை தேடல் கட்டமே எனக் கூறிய ஆ.கு எமது விமர்சனத்தில் முடிவு சொன்னது 'தேடல் கட்டம்' என்பதைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. தமது விமர்சனத்தை இருட்டடிப்புச் செய்ததன் ஊடாக 'விவாதம் திசைமாறாமல் செல்வதில்' என்ற ஆ.கு.வின் முடிவையும் நடைமுறைப் படுத்தியுள்ளனர். 'தேடல் கட்டத்தில்' உள்ள ஆ.கு. எப்படி பாஸிஸத்திற்கு எதிரான (ஐக்கிய முன்னணி) பிரச்சினையில் 'திசை மாறிச்' சென்றதாக கருதி மட்டுப்படுத்தினார்கள் என்பது வியப்பாகவே உள்ளது.

எம் கருத்துகள் மீதான இருட்டடிப்பு விமர்சன சுதந்திரத்தைப் புதைத்துவிடும் தன்மையானதே. அரசியலைக் கைவிட்டோ, எதிர்காலத்தில் மூன்றாவது பாதைக்கான அமைப்பை உருவாக்கும் நடவடிக்கைக்கோ எதிரானதாக எமது விமர்சனம் அமையவில்லை. ஒரு கட்சியே இப்படியான விமர்சனங்களை வைக்க முடியும் எனச் சொன்னவர்கள் ஒரு கட்சியைக் கட்டமுனையும் எமது கருத்துகளை இருட்டடிப்புச் செய்தது மட்டுமன்றி, மாற்றுக் கருத்தாகக் கருதிப் பிரசுரிக்கவும் தவறினர். கட்சியே விமர்சனத்தை முன்வைக்க முடியும் எனக் கருதும் ஆ.கு. ஒரு கட்சி கருத்துகளை முன்வைத்தும் நிராகரிக்கிறது. அப்படி எனின் எப்படிக் கட்சியைக் கட்ட முடியும்?

பாஸிஸத்திற்கு எதிரான சக்திகள் எனத் தூண்டில் கருதுபவர்கள் மீதான எமது விமர்சனம் எந்த விதத்திலும் தவறானது அல்ல. அது இன்று அவசியமானது. அப்போதுதான் மீண்டும் ஏமாற்றப்படாத ஒரு போராட்ட அமைப்பை உருவாக்க முடியும். நாம் தனிநபர்கள் மற்றும் சஞ்சிகைகள் மீது வைக்கும் விமர்சனம் எந்த விதத்திலும் அரசியலுக்குப் புறம்பானதல்ல. இதைப் பாஸிஸத்திற்கு எதிரான சக்திகள் மீதானது எனச் சொல்லி நிராகரிப்பது கடந்த காலத்தில் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோவின் விமர்சனங்களையே பிழை என வாதாடுவதாகும். மேற்குறிப்பிட்டவர்களின் விமர்சனங்களில் பெரும்பாலானவை அரசுக்கு எதிராக இருந்ததைவிட, அரச எதிர்ப்பாளர்கள் என்று சொல்லிக் கொண்ட தனிநபர்கள், பத்திரிகைகள், கட்சிகள் மீதே (நாம் செய்வது போல்) அமைந்துள்ளது. அதனால் மட்டுமே இவர்களின் தத்துவம் உயிர்வாழ்வது மட்டுமன்றி, புரட்சியை நடத்தி, சிறந்த கொம்யூனிஸ்டுகள் ஆகவும் இருக்க முடிந்தது.

தேடல் கட்டத்தில் உள்ளோம் எனச் சொல்லித் தூண்டில் தனது கருத்தைச் சொல்ல மறுப்பதைப் பார்ப்போம். சஞ்சிகை என்பது கருத்தைச் சொல்வது மட்டுமன்றிப் பரப்புகிறது. இது எச் சஞ்சிகைக்கும் பொருந்தும். இச் சமூக அமைப்பில் ஒவ்வொரு வார்த்தைக்கும் வர்க்க மூலம் உண்டு.

"வர்க்க சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பினராகவே வாழ்கின்றார். ஒவ்வொரு சிந்தனையிலும் விதிவிலக்கின்றி ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது" - நடைமுறை பற்றி மாவோ (1937)

எனவே தூண்டில் ஆ.கு.வுக்கு எல்லாப் பிரச்சினை மீதும் கருத்து இருக்கும். நீங்கள் நடுநிலைவாதிகள் இல்லைத்தானே. விமர்சனத்தை முன்வைப்பது ஆரம்பத்திலா, இறுதியிலா என்பதல்ல இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை. ஒரு கருத்து வெளிவரும்போது ஆ.கு. கருத்து கூற வேண்டும். உதாரணமாக ஒருவன் கொல்லப்படும்போது அவனுக்குச் சார்பாக நிற்கத் தவறி, அது தொடர்பாக முடிவில்லை என வாதிடின் அது கொல்பவனை ஆதரிப்பதே. தூண்டில் ஆ.கு எல்லோரிடமும் இழுபட்டுச் செல்லும் நிலையிலிருந்து எழுந்ததே எம்மீதான விமர்சனமும், ஆ.கு.வின் அறிமுகமும். இது அடிப்படைச் சமரசவாதமே.

ஒரு கருத்தின் மீது தமது கருத்தைச் சொல்லத் தவறின் வீரகேசரி போன்றவைகளில் வெளிவரும் அரசியல் கட்டுரைகள் போன்றதா தூண்டிலின் நிலையும்? நாம் கற்கின்றோம் என்ற வாதம் சிறுபிள்ளைத்தனமானது மட்டுமன்றி அசட்டுத்தனமானதுமே. கற்பது என்பது மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. ஒரு புரட்சிக்கு முன் எல்லாவற்றையும் கற்றுவிட்டுத்தான் புரட்சியை நடத்த வேண்டும் எனின், சில புத்திஜீவிகள் இப்படியே கதைத்துக் கொண்டிருக்கவே முடியும். புரட்சியின் முன் சில விடயங்கள் தெரிந்திருக்கும். புரட்சியில் புதிய பல விடயங்கள் எம் முன் வந்து போகும்போது அந்த நிலைமையில் கையாள்கின்றோம்.

தூண்டில் ஆ.கு புதிய விடயங்களை 'தேடல் கட்டம்' எனக்கூறி தமது கருத்தை முன்வைக்கத் தவறின் புரட்சியின் சக்திகள் அழிக்கப்பட்டு விடுவர். கருத்து கூற மறுப்பது இயங்கியலையே நிராகரிப்பதற்கு இட்டுச் செல்கிறது. ஒரு புரட்சியில் எழுந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு விடயத்திற்கும் முகம் கொடுப்பது போல்தான் தூண்டில் (வெளியீடுகள் புரட்சியின் ஒரு அங்கமே) ஒவ்வொரு கருத்துக்கும் முகம் கொடுத்து கருத்துச் சொல்ல வேண்டும். இதை விடுத்து எல்லாம் தேடிய பின்பு கருத்துக் கூற தூண்டில் விரும்பின் அக் கருத்து புரட்சிக்குச் சேவகம் செய்ய மாட்டாது மட்டுமன்றி, புதிய பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

கட்சி என்பது வானத்திலிருந்து விழுந்து விடுவது இல்லை. கட்சி பத்திரிகைக்கு ஊடாகச் சரியாக வழிநடத்தப்படுகின்றது. பத்திரிகையில் தாங்கிவரும் கருத்துகளைக் கொண்டு ஒரு மையம் உருவாகின்றது. அந்த வகையில் பத்திரிகை தனது கருத்துகளைத் தெளிவாக முன்வைக்க வேண்டும். அப்போதே வாசகர்கள் அதை நோக்கி நகர்வார்கள். கருத்தைத் தொகுத்து விடும்போது, அக் கருத்தை நோக்கி வரும் சக்திகளை என்ன செய்வது? ஒரு கருத்தின் மீது தனது கருத்தை சரி, பிழைக்கு அப்பால் முன்வைக்க வேண்டும். அப்போதே பத்திரிகை என்பது பத்திரிகைக்கான ஒரு பாத்திரத்தை நிறைவு செய்ய முடியும். இதைச் செய்யத் தவறும் தூண்டில் கடந்த 5 வருடத்தில் எதைச் சாதித்துள்ளது? நீங்கள் எதைத் தேடினீர்கள்? இது எமது மண்ணைப் பொறுத்தவரையில் மிக நீண்ட காலம். 5 வருடம் தேடிய தூண்டில் இன்னும் 5 வருடத்தின் பின்பும் தேடிக்கொண்டே இருக்கப் போகிறதா?

– சமர்

## வாயைத் திறந்தால்....... !

தூண்டில் ஜேர்மனியில் மட்டும் வெளிவருதல் போதாது. ஈழத்து மனவெண்ணங்களை, ஈழத்தின் பதிவுகளை எல்லாம் தாங்கி எமது ஈழ மண்ணில் சில புரிந்துணர்வுகளை ஏற்படுத்தலுக்காக வேண்டி இலங்கையை நோக்கிய வரவும் தூண்டிலுக்கு இன்றியமையாத கட்டாயமாகும்.

இலங்கையின் உண்மை நிகழ்வுகளை உரைக்கும் ஐரோப்பிய இதழ்களெல்லாம், கண்மூடியிருக்கும் இங்குள்ளவர்களுக்கு ஒரு விழிப்பை ஊட்ட வேண்டும். அப்படிச் செய்யாத பட்சத்தில் குடத்து விளக்காக மட்டும் செய்திகள் அமிழ்ந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் இலங்கையின் தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒவ்வொருவருடைய தொண்டைக் குழிக்கும் நேராக ஒவ்வொரு இறுக்கம் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறது. தணிக்கைசபை, அடியாட்கள் என்று பல கோணங்களில் செய்திகள் சிதைக்கப்பட்டுப் போகின்றன. கொஞ்சம் (பேனாவின்) வாயைத் திறந்தால் அவர்கள் வாய் பூட்டால் இறுக்கப்படும். அல்லது பத்திரிகைக் காரியாலயம் "சீல்" என்ற ஜனநாயகப் பூட்டால் பூட்டப்படும்.

இந்த நிலையில் தூண்டில் போன்ற இதழ்கள் மற்றவிடங்களைவிட இலங்கையில்தான் பெரிதாகத் தேவைப்படுகிறது. பொருளாதாரத்தில் இது பாரமான விடயம்தான். ஆனால் எமது சமூகம் குறித்து சிந்தித்து இதைச் சேவையாகத் தொடரலாம்.

- இ.அ.... (இலங்கை)

---

## ஜேர்மனி வாசகர்களுக்கு.....!

*01.071993 இலிருந்து நகரங்களுக்கான கோட்டு இலக்கங்கள் மாற்றப்படுகின்றன. 5 தானங்களைக் கொண்ட - நீங்கள் வசிக்கும் வீதிக்கான - புதிய கோட்டு இலக்கங்கள் தபாற் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன. உங்கள் முகவரிக்கான புதிய கோட்டு இலக்கங்களை காலக்கிரமத்தில் எமக்கு அறியத்தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.*

*- ஆ.கு.*

---

## நாட்டிலிருந்து ஒரு கடிதம்

புயலுடன் கூடி நின்று
பூக்களின் விடிவுக்காய்
பூபாளம் இசைக்கும்
புரியாத சேதிகளும்

காற்றை எதிர்த்து
கால் பதிக்க முற்பட்டதால்
பிடுங்கி எறியப்பட்ட
எங்கள் கிராமத்தின்
ஆலின் சேதியும்

தலை தாழ்த்தி
சமரசம் செய்ததால்
நாணல் மட்டும்
கூனிக் குறுகி
இப்போதும் வாழ்கிறதாம்

தான்களுக்கு தட்டுப்பாட்டால்
புகழாரம் மட்டுமே
புலம்ப வேண்டுமென
புதிய ஆணையாம்

தாங்கத்தால்
தவறி வந்தோம் என
தலை நிமிர்ந்தபோது
அங்கங்கள் அடித்து
நொருக்கப்படுகின்றனவாம்

இறுதிக் கடிதத்தில்
என் நண்பன்
எழுதிய சேதிகள் இவை.

- ஜெகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைகார முட்டைகள்

கத்தியால் குத்திக் கொல்வது, நஞ்சூட்டிக் கொல்வது. பொல்லால் அடித்துக் கொல்வது எல்லாம் ஆரம்பக் காலம். இன்று கட்டிப்பிடித்தே கொலை செய்வது வரை கொலைக் கலை வளர்ச்சியடைந்துள்ளது.

ஆனால் கண்ணுக்குத் தெரியாத எதிரிகளால் கொல்லப்படுவது வேறொரு ரகம்!

அணுஉலைகள் கசிவதால் மரணம். எய்ட்ஸ் நோயினால் மரணம். இரசாயனக் கழிவுகளால் மரணம். இவைகள் விபத்தென்றும், நோயென்றும் பேர்பெற்று விடுகின்றன.

இந்தவகையில் ஒரு புது ரகம்!

அதுதான் முட்டைக் கொலை!!

அண்மையில் வயோதிபர் விடுதியில் 8 பேர் முட்டையால் கொலையுண்ட பின்தான் முட்டை விவகாரம் பலருக்குத் தெரிய வந்துள்ளது.

ஸல்மொனெல்ல (Salmonelle) என்ற பக்ரீரியா பீடித்த முட்டையை நேரடியாகவோ, கேக்காகவோ, புடிங்காகவோ சாப்பிட்டவர்களுக்கு உடனடியாகவே வாந்தி, வயிற்றோட்டம், காய்ச்சல், தலைச்சுற்று என்பன உண்டாகின்றன. இவ்வாறான நிலையில் உடனடி மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்படாவிடின் மரணம் சம்பவிக்கிறது.

1980களின் மத்தியிலேயே ஸல்மொனெல்லவுக்குப் பத்துப் பேர் பலியானார்கள் என்று இப்போதுதான் தெரிவிக்கிறார்கள்.

பண்ணைகளில், கூடுகளில் அடைத்து வளர்க்கப்படும் கோழிகளுக்கே ஸல்மொனெல்ல சுலபமாகத் தொற்றுகிறது. இக்கோழிகளுக்குக் கொடுக்கும் இரசாயனம் கலந்த மாமிச உணவுப் பொருட்களின் மூலமாகவே ஸல்மொனெல்ல பரவுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

1950இல் சராசரி 5 நிமிடத்திற்கு 1 முட்டை என்றிருந்த நிலை மாறி இன்று 1 நிமிடத்திற்கு 1 முட்டை என்றளவில் முட்டை உற்பத்தி அதிகரிக்க வைக்கப்பட்டுள்ளது. இந்த ஜெட் வேகத்தில் ஸல்மொனெல்லவின் பரவுகையும் எந்தளவில் அதிகரித்திருக்கும் என்று பார்த்துக் கொள்ளலாம்.

1950இல் ஒரு ஜேர்மனியருக்கு 126 முட்டைகள் தேவைப்பட்டன. இது 1992இல் 240 முட்டைகளாக அதிகரித்துள்ளது. அதிகரித்த தேவையைப் பயன்படுத்தி அதிக முட்டைகளை இடக் கோழிகள் நிர்ப்பந்திக்கப்படுகின்றன! இந்த முட்டைகளில் வருடாந்தம் 10 மில்லியன் ஸல்மொனெல்ல பக்ரீரியா உள்ள முட்டைகள் சந்தைக்கு வருகின்றன. இந்த முட்டைகள் பலவீனமானவர்களிடம் போனால் கொன்றுவிடுகின்றன. மற்றவர்களைப் பலவீனமாக்கி விடுகின்றன.

ஸல்மொனெல்ல தொற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுள்ளதா என ஒரு கோழியைப் பரிசோதிக்க ஆகக் கூடியது 15 பெனிக்குகளே செலவாகும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். மக்களின் சாவைத் தடுக்க 15 பெனிக்குகள் செலவழிப்பதால் அரசுக்கு ஏற்படும் நட்டத்தை யார் ஈடு செய்வது என்ற கவலையில் ஸல்மொனெல்லவைப் பற்றிக் கணக்கிலெடுக்காத ஜேர்மனிய அரசு சோமாலியாவுக்கு டொச் இராணுவத்தை அனுப்பிவிட்டு இப்போது யூகோஸ்லாவியாவுக்குள் எந்தெந்த வழிகளில் உள் நுழையலாம் என்றே ஆலோசித்து வருகிறது. அரசின் கவலை அரசுக்கு!


ஜேர்மனியில் உள்ள ஏராளமான கோழிப் பண்ணைகளில் போல்மன்னினது Pohlmann பண்ணைகளில் மட்டும் 1 நாளைக்கு 3,2 மில்லியன் முட்டைகள் பெறப்படுகின்றன. ஸல்மொனெல்ல ஆபத்தைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என போல்மன்னிடம் பத்திரிகையாளர் கேட்டபோது அது பற்றிக் கவலைப்படுவது தன்னுடைய வேலை இல்லை என்ற பதில் கிடைத்தது. இப்படியான பணக்காரர்களுடன் மோதினால் அரசு எப்படி தன்னைக் காப்பாற்றுவது?

1985இல் அமெரிக்காவில் இ.ஸல்மன் Daniel E.Salmon என்ற ஆராய்ச்சியாளர் முதன்முறையாக இந்தப் பக்ரீரியாவை இனங் கண்ட நன்றிக்காக இந்தப் பக்ரீரியாவுக்கு அவருடைய பெயரையே சூட்டிவிட்டார்கள். ஸல்மொனெல்லவின் நீளம் 1/2000 மில்லி மீற்றர் மட்டுமே. அகலம் இதனிலும் அரை மடங்கு குறைவானது. ஸல்மொனெல்ல தான் போன இடங்களில் 24 மணித்தியாலத்திற்குள்ளாகவே தனது வேலைகளை ஆரம்பித்து விடும். இதன் பெருக்கம் அதி வேகமானது. 10 ஸல்மொனெல்லலாக்கள் 24 மணித்தியாலங்களுக்குள் 10 மில்லியன்களாகிவிடும். அப்புறம் தாக்குதலின் உக்கிரம் கூடிவிடும்.

கோழி முட்டைகளிலிருந்தே இதன் ஆபத்து அதிகமாய் உள்ளது எனினும் இறைச்சி, மீன், சமையல் உபகரணங்களின் மூலமாகவும் தொற்றுகின்றன என்று அறியப்பட்டுள்ளது.

என்ன அறிந்து என்ன! கவர்ச்சியான விளம்பரங்களுடன் அழகான பெட்டிகளில் வரும் முட்டைகளை உடைந்திருக்கிறதா இல்லையா என்று பார்த்து வாங்க மட்டுமே கடைக்கு வருவோரால் முடியும். கோழிகளைப் பரிசோதித்து தடுப்பூசி போட வேண்டியதும், பரிசோதனைக்குட்படாத முட்டைகளைத் தடைசெய்ய வேண்டியதும், கிருமிகளற்ற விலங்கு உணவுப் பொருட்களை சந்தைக்குக் கொண்டு வரவேண்டியதும் அரசின் நடவடிக்கைகள். ஆனால் மக்கள் சாகின்றார்கள் என்பதற்காக கவலைப்படுகிற அரசு எந்த நாட்டில்தான் இருக்கிறது என்று சொல்லுங்கள் பார்ப்போம்?!

- ரா.சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று கூட்டணி
# இன்று புலிகள்
# நாளை...?

## அரசியல் அநாதைகள் !
## பிரபா சொன்னால் கொலை !!
## மக்கள் துன்பம், புலிகள் சுகபோகம் !!!

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்கள் விரும்பியோ, விரும்பாமலோ தமிழீழ விடுதலைப் புலிகளே பிரதான சக்தியாகவும், தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்கின்ற ஒரேயொரு சக்தியாகவும் உள்ளனர். இதனால் புலிகள் விடும் தவறுகள் மொத்தமாக தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தையே சிதைக்கின்ற ஆபத்தான நிலமையும் கூடவே நிலவுகின்றது. இக் கட்டுரை புலிகள் விடுகின்ற அரசியல் தவறுகளைக் கோட்பாட்டு ரீதியில் இனங்காண முயல்கிறது.

### புலிகள் இயக்கத்தின் உருவாக்கப் பின்னணி:

தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்த பிரதான அமைப்புகளாக ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் விளங்கின. த.வி.கூ.வினது அரசியலின் தொடர்ச்சியாகவே புலிகள் இயக்கம் தோற்றம் பெற்றது. த.வி.கூ.வில் ஏற்பட்ட அதிருப்தியும், அதன் அரசியலை முன்னெடுக்க அதற்கு இருந்த போதாத் தன்மையுமே புலிகளின் தோற்றத்திற்கு காரணமாக இருந்தன. கூட்டணியின் அரசியலே புலிகளை உள்ளார்ந்த ரீதியாக வழி நடத்தியது. உண்மையில் கூட்டணியின் அரசியல் கோரி நின்ற போராட்ட வடிவத்தை - ஆயுதப் போராட்டத்தை - நடைமுறைப்படுத்தும் ஆற்றலோ, அதற்கேற்ற அமைப்போ அதனிடம் இருக்கவில்லை. தவிரவும், கூட்டணியின் தலைமையின் தரகுமிதவாதம், அதன் அணி முழுவதும் கோரிய அல்லது விரும்பிய தேசியவாதத்தை எப்போதும் கைவிடும் நிலையிலேயே இருந்தது. புலிகள் இப் போராட்ட வடிவத்தை முன்னெடுக்க துணிந்ததும், கூட்டணியின் பின்னால் திரண்டிருந்த தேசிய சக்திகள் புலிகளின் பின்னால் திரளத் தொடாங்கின. கூட்டணியின் அரசியலுக்கும், அதன் வெகுசனத் தன்மைக்கும், அதன் தலைமையின் வர்க்க இயல்புக்கும் இடையிலான முரண்பாடு இவ்வாறு புலிகளுடன் அணிகளை இணைப்பதில் அமைதி கண்டது. ஆனால் கூட்டணி அரசியலில் காணப்பட்ட அனைத்துத் தவறுகளும் கூடவே புலிகளுடன் சேர்ந்து கொண்டன. கூட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டணியில் இருந்திருக்கக் கூடிய ஓரளவு மக்கள் சார்பு சனனாயக அம்சங்கள் ஒதுங்கியோ, பிற விடுதலை இயக்கங்களுடன் அணி சேர்வதாகவோ போக, புலிகளுடன் கூட்டணியின் அனைத்து அம்சங்களும், ஆபத்தான தவறுகளும் அடிப்படைக் கோட்பாட்டு அம்சங்களாக இணைந்து கொண்டன. இவை இன்னொரு விரிவான ஆய்வுக்குரிய விடயங்கள். (இவை பற்றிப் பிறிதொரு தடவை எழுதலாம்.)

புலிகளின் கோட்பாட்டு ரீதியான தவறுகளாக இனங்காணப்பட்டவைகள் பின்வருமாறு:

1. தூய்மைவாதக் கண்ணோட்டம்
2. கருத்து ஒருமைவாதம்
3. சுத்த இராணுவக் கண்ணோட்டம்
4. தனிநபர் பயங்கரவாதம்

## தூய்மைவாதக் கண்ணோட்டம்:

தான் சார்ந்திருக்கும் சமூகத்தின் உயர் இலட்சியங்களை முழுச் சமூகத்திற்கும் பொதுவுடைமையாக்க வேண்டும் என எதிர்பார்த்தலே தூய்மைவாதக் கண்ணோட்டமாகும். த. வி. கூ. வின் தோல்விக்கு அல்லது 'துரோகத்திற்கு' காரணமாக அமைந்தது. இது சரிவர நடாத்தப்படாமையிலிருந்தே என்ற விமர்சனத்திலிருந்து கோட்பாடாக உருவாகியதே இத் தூய்மைவாதம்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் புகைக்கக் கூடாது. மது அருந்தக் கூடாது. காதலிக்கக் கூடாது. திருமணம் செய்யக் கூடாது என்பதும். போராளிகள் மக்கள் அல்லர். அவர்கள் மக்களிலிருந்து வேறுபட்ட வித்தியாசமான வாழ்க்கையை நடாத்துபவர்கள் என்பதும் இத் தூய்மைவாதக் கண்ணோட்டத்தின் வெளிப்பாடுகளே.

இக் கருத்துகளின் வளர்ச்சிகளினாலேயே மக்கள் போராட்டத்தை நடாத்துபவர்கள் என்றோ, போராட்டத்தின் பிரதான சக்திகள் என்றோ இவர்கள் கருதுவதில்லை. மக்கள் அல்ல, மக்களில் இருந்து வேறுபட்ட சிறு எண்ணிக்கையான இலட்சியவாதிகளே போராட்டத்தை நடாத்தி விடுதலையைப் பெற்றுத் தருவார்கள் என இவர்கள் கருதுகின்றார்கள். இதனாலேயே இவர்கள் என்றும் மக்களில் நம்பிக்கை வைக்காமல் இலட்சியவாத வீரர்களில் மட்டும் நம்பிக்கைகளை வைத்திருக்கிறார்கள்

இந் நிலை மக்களை போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தியதோடு தாங்களே போராடி தாங்களுடைய விடுதலையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைக்காமல் "எல்லாவற்றையும் பெடியங்கள் பார்த்துக் கொள்வார்கள்" எனும் மனோநிலையை அவர்களிடம் வளர்த்திருந்தது. அவர்களுடைய மனோநிலைக்கு மாறாக நிகழ்வுகள் நடைபெறவே "பிச்சை வேண்டாம். நாயைப் பிடி" என்ற தோரணையில் விரக்தியடைந்து நாட்டை விட்டு ஓடி ஒழியும் நிலையை அவர்களிடம் தோற்றுவித்தது.

மக்களிடமிருந்து அந்நியப்பட்ட புலிகளது நடவடிக்கையின் மற்றோர் விளைவு இவர்கள் மக்களின் கஷ்டங்களைப் பார்க்காமையாகும். போர்க்கால சூழ்நிலைகளில் மக்கள் கஷ்டங்களைச் சந்திக்கும் போது அவர்களின் கஷ்டங்களில் தாமும் பங்கேற்று மக்களின் கஷ்டங்களை குறைப்பதற்கு வழி தேடுவதே போராளிகளின் கடமையாகும். ஆனால் புலிகள் இவ்வாறு பங்கேற்காமல் மக்களின் மேல் மேலும் சுமைகளை ஏற்றி தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யவே முயன்றனர். இதனால் போர்க்கால சூழ்நிலையால் மக்கள் உணவுப் பொருட்கள், எரிபொருட்கள் என்பன கிடைக்காமல் அல்லலுற்று அலைந்தபோது புலிகள் அவை எல்லாவற்றையும் தாராளமாகப் பெற்று சுகபோக வாழ்க்கை நடாத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்நாமில் போர்க் கால சூழ்நிலையில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டபோது போராளிகள் வயல்களில் இறங்கி மக்களோடு சேர்ந்து உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மக்கள் கொடுக்கின்ற உணவுகளை உட்கொண்டு மக்களின் கஷ்டங்களில் தாமும் பங்கேற்றனர். இவ்வாறு மக்களோடு இரண்டறக் கலந்த நிலையை எமது போராட்டத்தில் சிறு துளி கூடக் காண முடியவில்லை.


தூய்மைவாதம் சமூக ஒழுக்கங்களாக வரையறை செய்யப்பட்டவைகள் மீறப்படுவதை பெரும் குற்றமாகக் கருதுகிறது. பாலியற் பலாத்காரம் களவு போன்ற குற்றங்கள் மரண தண்டனைக் குற்றங்களாக்கப்பட்டது இவற்றின் வெளிப்பாடே. ஆயினும் விரைவிலேயே புலிகளின் நடைமுறை இந் நிலைமையில் குறிப்பிடத்தக்களவு மாற்றத்தைக் கொண்டு வந்தது. பெண்கள் படையில் சேர்க்கப்பட்டதும், திருமண அங்கீகரிப்பும் கிடைத்தமை உதாரணங்களாகும்.

## கருத்து ஒருமை வாதம்

தங்களுடைய கருத்துக்களும் முடிவுகளும் மட்டுமே சரியானவை எனக் கருதும் கண்ணோட்டமே கருத்து ஒருமைவாதக் கண்ணோட்டமாகும். கருத்து ஒருமைவாதம் தூய்மை வாதத்துடன் இணைந்து வருவது இயல்பானது மட்டுமல்ல. இத்தகைய இணைவானது பெரியளவு ஆபத்தானதும் கூட.

உலகில் எப்போதும் ஒரேயொரு கருத்து மட்டுமே அதுவும் தாம் கொண்டது மட்டுமே சரியானது எனக் கருதும் இப் போக்கு அடிப்படையில் இறுக்கமான ஒரு சமயக் கோட்பாடு போல சமூக அமைப்புகளை சிதைக்கிறது. குழு வாதத்தை வளர்க்கிறது.

ஒருமைவாதக் கண்ணோட்டமுள்ளவர்கள் மாற்றுக் கருத்துகளையோ, மாற்று அமைப்புகளையோ ஒருபோதும் அங்கீகரிப்பதில்லை. இதன் வழி மக்கள் யுத்தப் பாதையையும் அங்கீகரிப்பதில்லை. இலட்சிய வாதத்தால் உந்தப்பட்ட வீரர்களை பலமாக அணிதிரட்டி, எதிரியை அழித்து தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ளலாம் என்றே புலிகள் நினைக்கிறார்கள். இதனால் மக்களை ஐக்கியப்படுத்துவதிலோ, மக்களுக்கு அரசியல் உணர்வூட்டி ஆயுத பாணிகளாக்குவதிலோ இவர்கள் ஒருபோதும் அக்கறை செலுத்துவதில்லை. மாற்றுக் கரு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்துள்ளவர்களை கொடுமையாக அழிப்பதற்கும் புலிகள் பின்னிற்பதில்லை.

இக் கருத்து ஒருமைவாத இயல்பு புலிகளிடம் மட்டும் தோன்றிய இயல்பு அல்ல. அது எமது சமூகத்தில் நீண்டகாலமாகவே நிலவி வருகின்ற இயல்பாகும்.

சைவத் தமிழ்ப் பின்னணியைக் கொண்ட எமது தமிழ்ச் சமூகத்தில் இது ஒரு கருத்தமைவாகப் பலமுடன் இருப்பது சாத்தியமே. பிற சமயத்தவர்களை பாவிகள் எனக் கருதும் சைவத் தமிழ்ப் பாரம்பரியம். கருத்து முரண்பாடுகளை கழுவேற்றியும், சிரச்சேதம் செய்தும் தீர்த்துக் கொண்ட இப் பாரம்பரியம் இதற்கு மிகவும் பலமான ஒரு அடிப்படையாக விளங்குகிறது எனலாம். பிற கருத்துகள் மீதான சகிப்புணர்வு இன்மையை இயல்பாகவே கொண்டிருந்தமையே சிறு சிறு மாற்றுக் கருத்துகளுக்காக பல்வேறு குழுக்கள் - எமது போராட்டத்தில் இருபதிற்கும் மேற்பட்ட குழுக்கள் இருந்ததாக அறிகிறோம் - தோன்றக் காரணம் என்று சொல்லலாம்! தவிரவும் மாற்றுக் கருத்துள்ளவர்களை தாக்குதல், அழித்தல் என்பன ஏற்கெனவே கூட்டணியால் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தன. துரையப்பா கொலை இதற்கு நல்ல உதாரணம்! கருத்து முரண்பட்டவர்களை கொல்வதை நியாயபூர்வமானதாக்கியதுடன், அதை ஒரு அங்கீகரிக்கப்பட்ட விடயம் என்றளவுக்கு சமூக அளவில் அங்கீகாரத்தை கூட்டணி உருவாக்கித் தந்திருந்தது. அத்துடன் இத்தகையவர்களுக்கு தண்டனை வழங்கும் உரிமை இலட்சியவாதிகளுக்கு உண்டு என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருந்தது.

கருத்து ஒருமைவாதிகள் தங்களின் வழிகாட்டிகளாக பண்டைக்கால மன்னர்களையும், அவர்களின் யுத்தங்களையுமே கொள்வது வழக்கமாகும். பண்டைக் காலத்தில் சமூகம் கொண்டிருந்த உயர் இலட்சியங்களின் இருப்பிடமாக மன்னரே கருதப்பட்டார். அவரே சமூகத்தின் பிரதான வழிகாட்டியாகவும், சமூகத்தைக் காக்கும் தலைவனாகவும் கருதப்பட்டார். மன்னரே படைகளைத் திரட்டி யுத்தங்களையும் நடத்துவார். மக்கள் யுத்தங்களில் பங்கு கொள்வதில்லை. ஆனால் யுத்தங்களின் சுமைகள் முழுவதும் மக்கள் மீதே சுமத்தப்படும்.

இதே தன்மைகளையே புலிகளின் அரசியலிலும் எம்மால் அவதானிக்க முடியும். புலிகளிலும் அவர்களது இலட்சியங்களின் உயர் இருப்பிடமாக தலைவர் பிரபாகரனே கருதப்படுகிறார். அவர் ஒருபோதும் தவறு செய்ய மாட்டார் என்பதே உறுப்பினர்களின் கருத்து. இதனாலேயே தமிழீழத்தின் தேசியத் தலைவர் என அவர் வர்ணிக்கப்படுகிறார்! அமைப்பின் பிரதான முடிவுகளை அவரே எடுப்பார். யுத்தம் புரிதல், சமாதானம் செய்தல் என்பவற்றையும் அவரே தீர்மானிப்பார். குழுவாகக் கூடி முடிவெடுப்பதை அவர் ஒருபோதும் விரும்புவதில்லை. இதனை அவர் நேரடியாகவே ஒரு தடவை "நாலு பேர் கூடி முடிவெடுக்க என்னால் முடியாது" எனக் கூறியுள்ளார்.

பிரபாகரனை எதிர்த்து ஒருவரும் கேள்வி கேட்க முடியாது. அபிப்பிராயமும் கூற முடியாது. பிரபா கொலை செய் என்றால் உறுப்பினர்கள் கொலை செய்வார்கள். பிரபா சயனைட் கடித்துத் தற்கொலை செய் என்றால் அவர்கள் தற்கொலை செய்வார்கள். சுருக்கமாகக் கூறினால் புலி உறுப்பினர்கள் மத்தியில் ஓர் பண்டைக்கால மன்னர் போலவே பிரபாகரன் தோற்றம் பெறுகின்றார்.

புலிகளின் வரலாற்று ரீதியான வழிகாட்டியாக, வீரம் செறிந்த போரை நடத்திய பண்டைத் தமிழ் மன்னர்களே விளங்குகின்றனர்.

*[ இறுதிப் பகுதி அடுத்த இதழில்... ]*

- குட்டியன் (ஈழம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(௨ஆம் பக்கத் தொடர்...)

"என்னண்ணே அவ கேட்டவ?"

"சாப்பிட போக விருப்பமா என்று கேட்டவன். நான் இல்லை எண்டுட்டன். இதுகளிட்ட பேர் கொடுத்தா நேரம் சென்டுதான் கூப்பிடுங்கள். ஒசி ஆஸ்பத்திரி எண்டாலே இதுகள் இப்பிடித்தான். வேலை செய்ய மாட்டுதுகள். எப்படியும் வெளியில அனுப்பிட்டு சும்மா இருக்கப் பாக்குதுகள். பார்த்தியே அந்த அடைச்சி அதோடு சண்டை பிடிக்குது"

நான் அண்ணே காட்டிய பக்கம் பார்க்கின்றேன். ஏதோ அவர்கள் இருவரும் சாதாரணமாக பேசுவது போன்றே எனக்குப் படுகின்றது.

"வரப் பிந்திப் போனாய். வேறை ஆளை ஜனாதிபதியாய் போட்டாச்சு"

– இன்னன்னா



"அந்த அடைச்சி சொல்லுறான் தம்பி வருத்தக்கார ஆட்கள் கனநேரமாக காத்துக் கொண்டிருக்க ஏலாது. நீங்க என்னடா எண்டால் வெளியில் சாப்பிட சொல்லுகின்றீர்கள். இது என்ன எவ்வளவு நேரத்திற்கு காக்கின்றது என்று"

என் நண்பனை நான் வந்த நாளிலிருந்து தொந்தரவு படுத்திக் கொண்டிருக்கிறேன். அவனைத்தான் நான் அடிக்கடி எல்லா அலுவல்களுக்கும் கூட்டிச் செல்கின்றேன். பாவம் அவன். என்னால் அடிக்கடி யூனிவசிற்றிக்கு மட்டம் போட வேண்டி ஏற்படுது. இந்த அண்ணேயைப் பழக்கம் புடிச்சால் இவரைக் கூட்டிக்கொண்டு விசயங்களை முடிக்கலாம். என் சிந்தனை வேலை செய்கின்றது.

"அண்ணே அடுத்த வாரமட்டில் எனக்கு உதவி செய்ய முடியுமே?"

"அதற்கென்ன தம்பி. லீவு எடுத்துக்கொண்டுதான் வரவேண்டும். அதுதான் கொஞ்சம் சிக்கல். என்ன செய்ய. உதவி செய்யத்தான் வேணும். பரவாயில்லை. நீ இருநூற்றைம்பது கொடுத்தால் எனக்கும் பிரச்சினை தீர்ந்த மாதிரி. உனக்கும் உதவி செய்த மாதிரி"

அண்ணேயிடம் இருந்து புதிய முகம் ஒன்று தெரியத் தொடங்கியது கண்டு எனக்கு ஆச்சரியம் –அதிர்ச்சி. சமாளித்துக் கொண்டு "சரியண்ணே" என்கிறேன்.

இந் நேரத்தில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த செல்வம் என்னைக் கூப்பிடுகின்றான். அண்ணேயிடம் விடைபெற்றுக்கொண்டு செல்வத்திடம் செல்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்வம் இண்டைக்கு டாக்டர்கள் குறைவாம். நம்மளைப் பார்க்க நேர மாயிடும். வா வெளியில போய்விட்டு வருவம். பேரைக் கொடுத்திட்டுப் போவம்"

"இப்ப பத்தாம் நம்பர் போகுது. நம்மட பதின் மூண்டு. இன்னும் கொஞ்ச நேரத்தில கூப்பிடுவாங்க"

நான் அண்ணே சொன்ன விசயத்தைக் கூறுகின்றேன். செல்வத்துக்கு ஒரே சிரிப்பு. "யார் சொன்னது?"

நான் அண்ணேயைக் காட்டுகின்றேன். "அந்தப் பொம்பிள என்ன சொன்னவ?" நான் கேட்கிறேன்.

" அவ ஒரு டாக்டர். இண்டைக்கு பதினொரு மணிக்கு இங்க உணவும் உடல் ஆரோக்கியமும் தொடர்பாக ஒரு கருத்தரங்கு நடக்கவிருக்கின்றதாம். அதில் கலந்துகொள்ள விருப்பப்படுகின்றவங்க பெயர்களைத் தரும்படி கேட்டவ"

எனக்குத் தலைசுற்றியது. என்னே அந்த மனுசனின் மொழிபெயர்ப்புத் தன்மை. பணத்தையும் கொடுத்து பிழையான மொழிபெயர்ப்பை வாங்கிக்கொள்ளும் நம்மவர்களின் கெதி என்னவாகும்?

13ஆம் இலக்கம் அழைக்கப்பட நானும், நண்பனும் டாக்டரிடம் செல்கின்றோம். திரும்பும் போது அண்ணே கூட்டி வந்த ஆளை டாக்டரிடம் அழைத்துச் செல்கின்றார்.

அண்ணேயின் மொழிபெயர்ப்பு வல்லமையினால் அந்த ஆளின் வியாதி என்ன புது நாமம் பெறப் போகின்றதோ? பாவம் அந்த மனிதர். அவரைக் காப்பாற்றுவது யார் புரியவில்லை.

அண்ணேயை..? இருக்கவே இருக்கின்றார்கள் என்னைப்போல மொழி தெரியா அப்பாவிகள்.

- மூத்தன்

---

*அடைச்சி: அல்ஜீரியப் பெண்களுக்கு நம்மவர் சூட்டிய நாமகரணம்.*
*கொமட்: பிரான்ஸில் தஞ்சம் புகுகின்றவர்களுக்கான இலவச வைத்தியசாலை.*

---

## மன்னிப்பு !!!

*சென்ற இதழில் அறிவித்த ஆக்கங்கள் சிலவற்றைத் தரமுடியாமல் மீண்டும் பக்கங்களுக்குத் தட்டுப்பாடு. சமகால முக்கியத்துவம் கருதி சில ஆக்கங்கள் பின்னுக்குப் போய்விட்டன. எப்படியும் தர முயற்சிப்போம் எனக் கூறி மன்னிக்க வேண்....!*

– ஆ.கு

## சபிக்கப்பட்ட சீவிதம்

நீண்டகாலமாய் இருள்!
பகலையும், இரவையும்
மூடிய இருள்!!
சூரியனும், நிலவும்
தொலைத்த தேசமிது.
வானமிருக்கிறதா?
மனிதன் இருக்கிறானா?
யார் நண்பன்?
யார் விரோதி?
எதுவுமே புரியாத இருள்!

மனதில் இருள்!
உறவால் இருள்!!
வாழ்க்கையால் இருள்!!!
ஒரு பரம்பரையினர்
பார்த்து சலித்த இருள்!

சகோதரனை
சகோதரன் கொன்றான்.
மனிதனை மனிதன் தின்றான்.
பிரபஞ்சத்தின் மீது
கவிந்து கிடந்தது இருள்!

மூடிய கதவுகள்
திறக்கப்படவில்லை.
தட்டுங்கள் திறக்கப்படும்
என்ற வார்த்தைகள்
பொய்த்துப் போயின.

மனிதனைத் தேடுவதற்கு
இங்கு வெளிச்சம் வேண்டும்!
நாளைவா மனிதனே!
இருளினுள் சுவாசித்து
இருளினுள்ளே
மரணித்துப் போனான் என்பது
இவனது வரலாறாகும்.

-யெம்.பௌலர் (ஈழம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாலையைத் தேடி...!

80களில் எதிர்ப்பிலக்கியமாக வெடித்த கவிதை 90களில் மேலும் பரிணாமம் பெற்று ஆழமான மனித நேயத்தை வற்புறுத்துகிறது. மனித உறவுகள், உணர்வுகள் எவ்வளவு சிக்கல்களுக்கு மத்தியிலும் பேணப்படுகிறது, பேணப்படலாம் என்பது இன்றைய கவிதை சுதந்திரமாக விகசிக்கும் ஒரு அம்சம்... என அண்மையில் ஒரு பத்திரிகையில் படித்திருந்தேன்.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெறத் தொடங்கிய 80கள் ஈழத்துக் கவிதைப் போக்கிற்கும் புது இரத்தத்தைப் பாய்ச்சியது. போராளிக் குழுக்களின் சுவரொட்டிகள் கூட கவிதையாக சுவர்களை அலங்கரித்தன. அந்தளவிற்கு 80கள் ஈழத்துக் கவிதை வீச்சின் முழுப் பரிமாணத்தையும் பெற்றது எனலாம்.

இங்கு முக்கியமான விடயம் என்ன வெனில். போராளிகளைக்கூட கவிஞராக மாற்றியது ஈழத்துக் கவிதைச் சூழல். சில ஈழக் கவிஞர்களின் கவிதைகள், பலஸ்தீனக் கவிதைகள், சோசலிசக் கவிதைகள் போன்றவற்றின் அருட்டுணர்வு போராளியாக இருந்த சிலரைக் கவிஞர்களாக மாற்றியது. வேறு நாடுகளின் அரசியல் வரலாற்றில் கவிஞர்களே போராளிகளாக மாறினார்கள். இங்கு செழியன், சூரியன், தமயந்தி, செல்வி போன்றோர் போராளிகளாக இருந்து கவிஞர்களாக மாறியவர்கள்.

உண்மையில் இக் கவிதை மரபானது தமிழுக்குப் புதிய வடிவமாகின்றது. புதிய உணர்வினைத் தருகின்றது. இக் கவிஞர்களின் பேனா மந்திரக் கோலாகின்றது.

இம் மரபின் வெளிக்கிளப்புகைதான் செழியனின் அதிகாலையைத் தேடி எனும் கவிதைத் தொகுப்பு.

இன்னொரு செய்தியையும் இங்கு தொட்டுச் செல்ல வேண்டும். கவிதைத் தடம் மாறிவிட்டது. மேற்கூறிய பரம்பரை அவ்வாறே தொடர்ந்து இருக்க, ஈழத்துக் கவிதை உலகில் புதுப் பரிமாணத்தைச் சேர்த்த கவிதைகள் அவ்வாறே தொடர்ந்து வரை, கவிதை எழுதும் களம் தடம் மாறிவிட்டது. கவிதைகள் புலம் பெயர்ந்து விட்டன.

இதனால் செழியனுடன் கவிதையும் புலம் பெயர்ந்தது. அட்டையில் ஈழப்பிரதேசமும், அதன் வயலும், வண்டிலும், மாடும், மருதமும், பனைகளும், வடலியும் அதனுள்ளே தாய்மண் பற்றிய ஏக்கமும். அகதி வாழ்வும், அவல நிகழ்வும் என தொகுப்பு சுடர் விடுகின்றது.

இந்த இடத்தில் வ.ஐ.ச.ஜெயபாலனின் ஒரு அகதியின் பாடல் எனும் தொகுப்புடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்க ஆவலாக இருந்தது. இரு கவிஞர்களும் அகதிகளாகி அந்நிய நாட்டில் இருப்பவர்கள். அவர்களது ஏக்கமும், துயரும் எத்தகையன என ஒப்பிட்டு நோக்க மனம் அவாவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.ஐ.ச.ஜெயபாலனின் 'ஒரு அகதியின் பாடல்' தொகுப்பை எடுத்து நோக்குவோமாயின், அகதி வாழ்வை விரும்பி ஏற்றிருக்கின்ற ஒரு கவிஞனையே நாங்கள் இனங்காண்கிறோம். சூழலில் யாதொரு சிக்கலும் இல்லாதிருந்த நேரத்தில் தமிழ்நாட்டில் சந்தோஷமாகச் சீவித்து, 'கோத்தகிரி பஸ்ஸில் நீலகிரிக்குப் பயணப்படும்' ஒரு கவிஞனை அகதியாக எண்ண முடியவில்லை.

*"எனது உலகிலோ*
*கடல்கள், நதிகள், காடுகள், வயல்கள்,*
*வானவில்லின் கீழ்*
*தூயகாற்று நிறைந்த புல்வெளிகள்,*
*மலைகள், பள்ளத்தாக்குகள்,*
*வானில் சூரியன், நிலவு,*
*சுடரும் உடுக்கள்*
*கீழே பறவைகள் இவற்றுடன்*
*மனிதர்கள்.*
*எனது உலகம்*
*உயிர்த்துடிப்பானது"*

- என்கிறார் ஜெயபாலன். உல்லாசப் பயணம் செல்கிற மனிதனுக்கு வாழ்க்கை உயிர்த்துடிப்பானது. இதனை அவரின் கவிதையில் எங்கும் காணலாம். அதற்காக அகதி வாழ்வென்பதால் அழுது வடிகிற கவிஞனாக இருக்க வேண்டுமென்பதில்லை. ஆனால் ஜெயபாலனின் கவிதைகளில் அகதி வாழ்வை விரும்பி ஏற்கிற மனோபாவத்தையே காணலாம். கவிதைகளிலும் அந்த உணர்வைக் காட்டுகிற வரிகளையே காணமுடிகின்றது.

தமிழ்நாட்டை விட்டு அப்புறமாக நோர்வேயில் அகதி வாழ்வு மேற்கொள்கின்றபோது, 'வாழ்வை ரசிக்கும் கலையை அறிந்தவரின் நாடு வந்ததினால்' மகிழ்கிற ஒருவனாகவே ஜெயபாலன் தெரிகிறார். ஏஜென்சிக்குக் காசு கட்டி, வெளிநாட்டில் இறங்கியவுடன் மலைத்துப் போய் வாயைப் பிளக்கிற சாதாரண மனிதனாக ஜெயபாலனுக்கு,

*"வெண்பனி போர்த்த உலகில் பகல் விடியும்.*
*வெள்ளிப் பைன்மரங்கள், இலையுதிர்த்த*
*வெள்ளிப் பேச்மரங்கள்*
*வெள்ளி வெள்ளிப் புல்வெளிகள்*
*சோங்ஸ்வன் ஏரியும்*
*இலையுதிர்காலமும்*
*ஒஸ்லோ நகரும்*
*கார்ல்யோஹன் தெருவும்"*

- ஆச்சரியமளிக்கின்றன. வாயைப் பிளந்தபடி நிற்கிறார்.

செழியனின் கவிதைகள் இதிலிருந்து மாறுபட்டன. அகதி வாழ்வு செழியனுக்கு உறுத்துகிறது. "இப்படியாகும் என்று யார் நினைத்தார்கள்?" என்று கேட்கிறார். அவர் இந்த வாழ்வை விரும்பி ஏற்கவில்லை.

*"எரிகின்ற தேசத்தில் வாழ்கின்ற மனிதர்களோடு வாழ்வதற்கான என் விருப்பத்தைத் தெரிவித்தேன். துரத்திவிட்டார்கள்"*

- என்றுதான் செழியனால் சொல்ல முடிகிறது. இவை முன்னுரையில் குறிப்பிட்டவை. என்றாலும் கவிதை கூறும் செய்தியும் அதுதான்.

*"நான்*
*என் தேசத்திற்குச் செல்வேன்.*
*தேசம் எரிகின்ற போதும்*
*அது எழுகின்ற போதும்*
*வாழ்கின்ற*
*என் தேசத்து மனிதர்களோடு*
*புன்னகை செய்வேன்"*

- என்று வருகின்ற வரிகள் அதனையே கூறுகின்றன.

இத் தொகுப்பிலும் மேபிள் மரங்களும், வெண்பனிகளும் இல்லாமல் இல்லை. ஆனால் அவற்றை ரசிக்கும் மனோநிலையில் கவிஞன் இல்லை. அவனுக்குத் தாய் நாட்டின் ஏக்கம்.

*"அங்கே வயல்களின் மேலே*
*நெருப்பும் புகையும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மரணம் மலிந்துபோன தேசம்"*

மேபின் மரங்களுக்கும் மேலாக தாய் நாட்டின் வயலை நேசிக்கிறான். வெண்பனிக்கும் மேலாக நெருப்பையும், புகையையும் யோசிக்கிறான். கவிதை அத்துடன் முடியவில்லை.

*"எஞ்சியிருப்பவை*
*கரித் துண்டுகளாயினும்*
*எழுதியே முடிப்போம்"*

- இவ்வாறுதான் கவிதை முடிகிறது. இந்தக் கவிஞனுக்கு நம்பிக்கை இருக்கிறது. அவனது கவிதை மொழி நம்பிக்கையிலிருந்து பிறக்கிறது.

'ஒரு அகதியின் பாடல்' எனத் தலைப்பு வைக்கிறபோதே, "நான் அகதி; என்னில் அநுதாபப்படு" எனும் தொனி அதில் இருக்கிறதல்லவா? அத்தகைய தொனி இருந்தால் கூடப் பறவாயில்லை. பின்னர் உல்லாசமாகப் பொழுதைப் போக்குகிற கவிஞனாக ஜெயபாலன் தெரிகிறார். செழியனின் 'அதிகாலையைத் தேடி' எனும் தலைப்பிலேயே நம்பிக்கைத் தொனி தொக்கு நிற்கிறது. ஒரு தேடல் காணப்படுகின்றது.

உண்மையில் செழியன் இத்தகைய கவிதைகளை எழுதியதையிட்டுப் பெருமைப்படலாம். அதுவும், இன்னொரு கவிஞனின் தொகுப்பொன்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோதே செழியனின் மனோநிலை நமக்குப் புரிகின்றது.

இரு தொகுப்பிலும் பாடல்களும் சில உள்ளன. ஜெயபாலனின் தொகுப்பிலுள்ள பாடல்களில் ஒரு வரி இது:

*" பூமியில் என்றும் அகதிகள் என்று*
*புழுதி மண் போல சுழலுவதோ*
*தாயகம் மீண்டு துயர்களை வென்று*
*தலை நிமிர்ந்தே நாம் வாழுவதோ"*

செழியனின் தொகுப்பிலுள்ள ஒரு பாடல் வரி இது:

*"அகதியில்லை அகதியில்லை என்று*
*சொல்லுங்கள்*
*நமக்குமோர் தேசம் உண்டு நிமிர்ந்து*
*நில்லுங்கள்"*

இரண்டையும் ஒப்பிடவில்லை. வாசகர்களின் ஆய்வுக்கு விட்டுவிடுகிறேன்!

செழியனின் கவிதைகளில் காணப்படும் பிரதான குறைபாடு சேரனது கவிதைகளின் பாதிப்பு மிகவும் மேலோங்கிக் காணப்படுவது. ஏலவே செழியனது 'இல்லாமல் போன தோழனுக்கு', 'மரணம்' என்ற இரு கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. மூன்றாவது தொகுப்பிலும் இதே பாதிப்புக் காணப்படும்போது செழியனைக் கொஞ்சம் எச்சரிக்க வேண்டியதாகின்றது.

*"முகில்களின் மீது*
*நெருப்பு தன் சேதியை*
*எழுதியாயிற்று"* எனும் சேரனின் வரியும்,
*"வயல்களின் மேலே*
*நெருப்பும் புகையும்"* எனும் செழியனின் வரியும் ஒத்துப் போகின்றன.

*"உன்னை மட்டுமா*
*நாங்கள் இழந்தோம்"* என்பது சேரனின் வரி.
*"நாட்களை இழந்தோம்*
*உறவுகளை இழந்தோம்"* என்பது செழியனின் வரி.

*"துப்பாக்கி பற்றி ஒரு கவிதை"* என்பது சேரனின் தலைப்பு.
*"துப்பாக்கிகளைப் பற்றி"* என்பது செழியனின் தலைப்பு.

இவை வகைமாதிரிக்குச் சில உதாரணங்கள். இப் போக்குத் தவிர்க்கப்பட வேண்டும். செழியனின் கவிதைகளில் தனித்துவம் உண்டு.

* நம்பிக்கைத்தொனி காணப்படுதல்.
* எளிமையாக அமைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உண்மையாக இருத்தல்.(இது மிகவும் முக்கியமானது)
* சிறுமை கண்டபோது பொங்குதல்.
* அழகியலை அளவாகக் கையாளுதல்.


- அனந்து (ஈழம்)

---

*"அதிகாலையைத் தேடி" வெளியீடு:*
Kalam Veliyiedu, 3000-Victoria Park Ave, #438, North York, Ontario, Canada.

*"ஒரு அகதியின் பாடல்" வெளியீடு:*
Thedal Pathippakam, 556-Parliment Street, Toronto, M4X1P8, Canada

---



## தூண்டில் முகவரியில் மாற்றம் !

*01.07.1993இலிருந்து நகரங்களுக்கான கோட்டு இலக்கங்கள் 5 தானங்களைக் கொண்டவையாக - குறிப்பிட்ட தெருக்களுக்கு உரியவையாக - மாற்றமடைகின்றன. இதன்படி தூண்டிலின் பழைய முகவரியிலுள்ள 4600 Dortmund என்பது 44137 Dortmund என மாற்றமடைகிறது.*

ஆ.கு

---

## கூட்டிச் செல்லுங்கள்

தூரத்து விடுதலை
நோக்கிப் போகிறோம் என்பார்.
தூரம் அதிகமில்லை என
நம்பிக்கையும் ஊட்டுவார்
தூரம் போகத் தயாரானவர்களை
நகரமுடியாது குழப்பியடிப்பார்.

எனக்கோ
தூக்கத்திற்குப் போனாலும்
நித்திரையில்லை.
தூங்கி எழுந்தாலும்
நிம்மதியில்லை.
தூரப்போக நானாக
முயற்சிக்கவுமில்லை.

தூரத்திற்குப் போனவர்கள்
உண்டா?
துரத்தியடிக்கப்பட்டவர்கள்
அதிகமா?
தூக்கியெறியப்பட்டோர்
கொஞ்சமா?

துளிகூடப் புரியவில்லை!
தற்கொலை செய்யவும்
முடியவில்லை!!
தூரத்து விடுதலைக்கு
நடக்கத் தயாரானவர்கள்
தூரமாகவேயென்றாலும்
என்னையும் கூட்டிச் செல்லுங்கள்.

- மனோகரன் (ஈழம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிக் கொஞ்சம் நாங்கள்.....

சென்ற இதழில் இரண்டு மரணங்கள் பற்றி எழுதியிருந்தோம். அந்த ராசியோ என்னவோ இம் முறையும் இரண்டு கொலைகள் பற்றி எழுத வேண்டி வந்துவிட்டது. தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் மறக்க முடியாத இரண்டு நபர்களின் கொலைகள் அவை.

ஒன்று லலித் அத்துலத் முதலி. மற்றையது ஜனாதிபதி பிரேமதாசா.

லலித் ஜே.ஆரின் அரசாங்கத்தில் பிரபல்யமாகியவர். அவர் பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோதுதான் இலங்கை இராணுவம் யுத்தம் நடத்தும் ஒரு படையாக தன்னை உருவமைத்துக் கொண்டது. நவீன ரக ஆயுதங்களைக் கண்டது. கிட்டத்தட்ட இரண்டரை மடங்காகப் பெருத்திருந்தது.

வடமாராட்சி ஒப்பிரேஷன் லிபரேஷன் அவரது 'மகத்தான சாதனை'யாகப் பேசப்படுகிறது.

கிட்டத்தட்ட வடக்கு முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த புலிகளின் அரசியல் ஞான திருஷ்டியின்மையையும், பலவீனத்தையும் சரியாகக் கணிப்பிட்டு தாக்குதலை நடாத்தியதன் மூலம் புலிகளைக் குடாநாட்டுக்குள் முடக்கியது அவரது சாதனை என்று பலராலும் புகழப்படுகிறது.

சிங்கள பௌத்த பேரினவாத அரசின் அறிவுக்கூர்மை மிக்க ஒரு தலைவர் அவர் என்ற முறையில் அவரது இழப்பு பேரிழப்பாகவே ஸ்ரீலங்காவில் கருதப்படுகிறது.

மற்றவர் பௌத்த பேரினவாதத்தை மிகவும் நன்றாகவே தழுவிக்கொண்ட விடாமுயற்சியுள்ள ஒரு தேசபக்தராக கருதப்பட்டவர். நாட்டின் வறுமையை ஒழித்து, இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் நிறுத்தி நாட்டில் சுமுகமான நிலையைத் தோற்றுவிக்கப் போகிறவர் எனப் பலராலும் - புலிகள் உட்பட - புகழப்பட்டவர். இந்தியப்படையை வெளியேற்றியது, பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க மறுத்தது என்பன இவரது தேசபக்திக்கு சான்றுகளாக கூறப்படுகின்றன.

தமிழ் இயக்கங்களை 'ஜனனாயக நீரோட்டத்திற்கு' இழுத்து அவற்றைத் துரோகிகளாக்குவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி பெற்றவர் அவர்.
சரியாகச் சொல்லப் போனால்
அவர்களைத் தனது
குண்டர்களாக்கியதன் மூலம்
இனவாதமற்ற தலைவராகப்
பெயர் எடுத்தவர்.

இருவரதும்
இந்தியாவுடனான உறவு
என்பது அவ்வளவு அழகாக
இருந்ததில்லை.

யு.என்.பி.யின் தலைமை
பிரேமதாசாவிடம்
கைமாறியபின்,
பாராளுமன்றம் அதன்
சுயரூபத்தைத் தெளிவாக
விளங்கிக் கொள்ள முடிந்தது.
வெறும் அரட்டை மடம்
என்பதற்கு மேல் அதற்கு
எந்த அதிகாரமும் இல்லை
என்ற உண்மையை மக்களுக்கு
விளக்கியது உண்மையில்
பிரேமதாசாவின் அரசே.
ஜனாதிபதி என்ற தனிநபரின்
சட்டபூர்வ அதிகாரங்களை
உருவாக்கித் தந்த
பாராளுமன்றத்தில் உயர்மட்ட
அமைச்சராக இருந்த லலித்
'ஜனநாயகத்தைக் காக்கவும்',
'தனிநபர் சர்வாதிகார
முறையை ஒழிக்கவும்' என்ற
'உட்கட்சிப் போராட்டம்'
நடாத்தித் தோல்வியுற்று
வெளியேறினார்.

அனைத்து ஜனநாயக
உரிமைகளையும் பிடுங்கி
சர்வாதிகாரியாக தன்னை
நிறுவிக் கொண்ட
பிரேமதாசா, அதைச் செய்யத்
தனது சொந்தக்
குண்டர்படைகளைப்
பயன்படுத்தினார். இராணு
வம், பொலிஸ் என்பவற்றுள்
தனது சதிக்குழுக்களை
உருவாக்கி அரசியல்
விரோதிகளை மிரட்டியும்,
கொன்றும் காட்டாட்சி
நடாத்துகிறார் என்று லலித்
கோஷ்டி விமர்சித்தது.
கிருலப்பனை கூட்டத்தில்
வைத்து சுட்டுக்
கொல்லப்பட்டார் லலித்.

வழமைபோல அடையாள
அட்டையுடன் ஒரு தமிழரின்
சடலத்தை மறுநாளே
பொலிஸார் கண்டு பிடித்தனர்.
புலிகளின் தலையில்
கொலைக்கான பழி
போடப்பட்டது. ஆனால்
இதை யாரும் நம்பத்
தயாராக இருக்கவில்லை.

பொலிஸாரின் விசாரணை
'நாடகம்' என்று கூறிய
லலித்தின் கட்சியினரைத்
திருப்திப்படுத்த
லண்டனிலிருந்து
ஸ்கொட்லண்ட்யாட் துப்பறியும்
நிபுணர் குழுவை
வரவழைத்தது அரசு.
விசாரணை நடந்து
கொண்டிருக்கையிலேயே பல
தில்லுமுல்லுகள் அரசாலும்,
பொலிஸாலும் அதைத் திசை
திருப்பும் வகையில்
நடாத்தப்பட்டன.

மே முதல் திகதி பிரேமதாசா
கொல்லப்பட்டார்.
நியாயமான முடிவு என்ற
கருத்தே நாடு முழுவதும்
மேலோங்கி நின்றது. பலர்
வெடி கொழுத்தி கொண்டாடி
மகிழ்ந்தார்கள்.

இக் கொலைக்கும் ஒரு
புலியே காரணம் என்று பிறகு
பொலிஸ் அறிவித்தது. இம்
முறை அடையாள அட்டை
இல்லை. மாறாக தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது.

விசாரணைகள் தொடருகின்றன!

லலித்தின் கொலை நாட்டில் பாராளுமன்ற 'ஜனநாயக நீரோட்டத்தில்' நம்பிக்கை வைத்த அனைவருக்கும் குடல் நடுக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக இருந்தது.

பலரால் கண்டிக்கப்பட்டது. எல்லா ஜனநாயக விருப்புள்ள சக்திகள் மற்றும் எதிர்க்கட்சிகளால் கண்டிக்கப்பட்டது.

பிரேமதாசாவின் கொலைக்கு வெளிநாடுகளிலிருந்து - குறிப்பாக இந்தியாவிலிருந்து - வந்த அநுதாபச் செய்திகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையிலிருந்து வந்தவை சொற்பமே.

இந்தக் கொலைகளை புலிகளே செய்திருக்கலாம் என்பதைவிட யு.என்.பி.க்குள் உள்ள சதிகாரர்கள் செய்திருக்கலாம் என்ற செய்திகள் விசாரணைகளையும் மீறி அடிபட்டுக் கொண்டிருக்கின்றன.

இவை எல்லாவற்றையும் விட புதிதாக ஒரு செய்தியும் அடிபடுகிறது. இக் கொலைகளுக்கு இந்திய 'றோ'வின் பின்னணி இருக்க முடியுமா என்பதே அதுவாகும்.

இதற்கு ஆதாரமாக, கொல்லப்பட்ட இருவரும் இந்திய எதிர்ப்புவாதிகள் என்பதும், பிரபாகரனை வெளியேற்றவென யாழ்ப்பாணத்தில் இந்திய-இலங்கை கூட்டுப்படைத் தாக்குதல்களை நடாத்த இப்போது இந்தியா முயன்று வருவதும் சுட்டிக்காட்டப்படுகின்றன. அத்தகையதொரு தாக்குதலுக்கு முன்னால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைவிட சற்று அதிக அதிகாரம் கொண்ட தீர்வொன்றை முன்வைத்து புலிகளை அரசியல் ரீதியாக அந்நியப்படுத்த இந்தியா முயல்வதாகவும் பேசப்படுகிறது. இதை ஒரு பிரபல சிங்களப் பத்திரிகை கொழும்பில் வெளியிட்டுள்ளது.


இந்தியாவின் பிராந்திய ஆதிக்கத்துக்கு அச்சுறுத்தல் இல்லாதிருக்கவும் தனது மேலாண்மையை காத்துக்கொள்ளவும் இந்தியா எடுத்துவரும் இந் நடவடிக்கை விரைவில் வெளிவரும் என அப் பத்திரிகை அடித்துக் கூறுகிறது.

எப்படியோ, இக் கொலைகள் தமிழ் மக்களைப் பொறுத்தவரை எத்தகைய நன்மைகளையும் கொண்டுவரப் போவதில்லை என்பது வெளிப்படை.

தமிழ் மக்களை தமது நலன்களுக்காகப் பயன்படுத்துவதில்தான் எல்லோருக்கும் அக்கறை.

இந்தியா, இலங்கை அரசும் அதன் கூட்டாளிகளும்... ஏன் புலிகள் எல்லோரதும் நிலையும் அதுதான்.

நாங்கள் எப்போது விழித்து....?!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூன் 1993
கலம்: 57

முகவரி:
THOONDIL
Südasien Büro
Grosse Heim Str. 58
44137 Dortmund 1
Germany

சந்தா:
(6 மாதங்களுக்கு
தபாற் செலவுடன்)
உள்நாடு: 20,-டி.எம்
ஐரோப்பா: 22,-டி.எம்
பிற: 28,-டி.எம்

தபாற் கணக்கு இல.
308 07 468
Postscheckamt-
Dortmund
BLZ 44o loo 46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org